



# வேதாரணியத்திலிருந்து டில்லி ராஜ்கட் வரை

டாக்டர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

# வேதாரணியத்திலிருந்து
# டில்லி ராஜ்கட் வரை

பூங்கொடி பதிப்பகம்

# வேதாரணியத்திலிருந்து டில்லி ராஜ்கட் வரை


சிலம்புச் செல்வர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்



பூங்கொடி பதிப்பகம்

14. சித்திரைக்குளம் மேற்கு வீதி

மயிலாப்பூர்: : சென்னை-600 004.

முதற் பதிப்பு : டிசம்பர், 1988.

உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 10-00

அச்சிட்டோர் :

கனிமொழி அச்சகம்
19 வடுகு இடையர் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

# முன்னுரை

சுதந்திர 40-ஆம் ஆண்டு நிறைவையொட்டி, ''வேதாரணியம் தொடங்கி டில்லிராஜ்கட் வரை'' ஒருவார காலம் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்னும் முறையில், தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் பேற்றினைப்பெற்றேன். அந்த நிகழ்ச்சி களைப்பற்றிய விவரங்கள் இந்நூலில் தரப் பட்டுள்ளன.

சுதந்திர வரலாற்றை யொட்டிய ஒரு சின்னஞ் சிறு நிகழ்ச்சிகூட நூல் வடிவம் பெறுமானால் அது சரித்திர ஆவணமாக ஆகும் தகுதிபெற்றதாகும். அந்த வகையிலே இந்நூலும் தகுதிபெறும் என்ற கருத்துடன்தான் இதனை எழுதி, வெளியிட்டிருக் கிறேன்.

ஒவ்வொரு நிகழ்ச்சி சம்பந்தமான புகைப் படங்களும் கிடைத்திருக்குமானால், இதிலே சேர்த்து, வாசகர்கள் கண்டுகளிக்கச் செய்திருக்க முடியும். ஆனால், அவற்றையெல்லாம் சேகரிக்க எனக்கு அவகாசமில்லை. அத்துடன் எப்போதுமே அதிகப்படியான விளம்பரத்தைப் பெறுவதிலே ஏனோ எனக்கு ஆர்வம் ஏற்படுவதில்லை! அந்தத் தன்னடக்க உணர்ச்சி காரணமாகவும், இன்னும்

விரிவான முறையில் செய்திகளை வழங்கவும், நிகழ்ச்சிகளுக்கான படங்களைத் திரட்டி, இதிலே சேர்க்கவும் தவறிவிட்டேன். ஆனால், முக்கிய நிகழ்ச்சிகள் விடாமல் தரப்பட்டுள்ளன. என்ன காரணத்தாலோ தேசியவாதிகளின் வட்டாரத்திலே சரித்திர நிகழ்ச்சிகளை நூல் வடிவம் அளித்துத் தரும் ஆர்வம் வெளிப்படவில்லை. அந்தக் குறையை ஓரளவேனும் அகற்ற விரும்பி, விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புடைய சுமார் 50 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். அந்த வகையில் இன்னும் எத்தனையோ நூல்களை எழுதத் திட்டமிட்டு, விஷயங்களையும் சேகரித்து வைத்துள்ளேன். இறைவன் வாய்ப்பு தருவானானால், அவற்றை வெளியிட முடியும் என்று நம்புகிறேன்.

என்னுடைய நூல்களை வெளியிட்டுவரும் ''பூங்கொடி பதிப்பகத்தாரே'' இந்நூலையும் அழகிய அமைப்புடன் வெளியிட்டிருக்கின்றனர். அந்தப் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையாவுக்கு எனது நன்றி உரித்தாகுக!

ம. பொ. சிவஞானம்

# பதிப்புரை

அன்னியரிடம் அடிமைப்பட்டிருந்த பாரதத்தில் அடிமைகளாய் வாழ்ந்து கொடுந் துன்பத்தை அனுபவித்த தலைமுறை மறைந்து குறைந்து விடுதலை பெற்ற பாரதத்தில் தோன்றிய புதிய தலைமுறை நாட்டின் நிர்வாகங்களில் பொறுப்பேற்று வருகின்ற கால கட்டம் இப்போது.

இந்த நிலையில்தான் பாரதம் விடுதலை பெற்ற நாற்பதாண்டு விழா இமயம் முதல் குமரி வரை ஒரு புதிய—வித்தியாசமான முறையில் கொண்டாடப்பட்டு இருக்கிறது.

இந்திய விடுதலை சுலபமாக வந்து விட்ட ஒன்று அல்ல; ஒரு சில நாட்களில் கிடைத்ததும் அல்ல என்பதை இன்றைய புதிய தலைமுறையினர்க்கு உணர்த்தியாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருககிறது.

நூற்று ஐம்பது ஆண்டுக்காலம் தொடர்ந்து போராடி லட்சோப லட்சம் பேர் சொத்தை இழந்து, சுகத்தை இழந்து உற்றார் உறவினரை இழந்து உயிரை ஈந்துபெற்ற, விடுதலை நம் பாரதத்தின் விடுதலை. அப்படிப் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் பொறுப்பையும் ஏற்படுத்துகின்ற வகையில் நாடெங்கிலும் அன்று ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அடக்குமுறைகளை ஏற்ற நிகழ்ச்சிகளை இன்றைய புதிய தலைமுறையினர் அறிந்து பொறுப்பு உணர்வு பெற மறு அர்ப்பணம் செய்யப்பட்டது.

பாரத நாடு இன்று இருக்கும் நிலையில் இந்த விழா மிகமிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் அன்னிய ஆதிக்கவாதிகள் பாரத நாட்டிற்குள் நுழையவும் படிப்படியாக பாரதநாட்டை சுலபமாக அடிமை கொள்வதற்கும் எந்தெந்த சக்திகள் காரணமாக இருந்தனவோ அந்த சக்திகள் இன்றைக்கு பாரத நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு சவால் விட்டுக் கொண்டு வளர்ந்து வருகின்றன.

இன்று மதவெறி, இனவெறி, மொழிவெறி, பிரிவினை வாதம் ஆகிய தீய சக்திகள் தலைதூக்கி நிற்கின்றன.

ஆகவேதான் இப்படிப்பட்ட தீய சக்திகளை முறியடிக்கவும், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கவும் இக்கால இளைய சமுதாயம் பொறுப்பேற்க வேண்டுமென்பதற்காக அன்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமை ஏற்று நடத்திய வேதாரணியம் உப்புச் சத்தியாகிரகப் போர் நிகழ்ச்சியை மறு அர்ப்பணம் செய்து காட்டப்பட்டது. பழம்பெரும் தேசியத்தலைவர் சிலப்புச் செல்வர் ஐயா டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் தமிழகத்தில் நடத்தப்பட்டது.

சிலம்புச் செல்வர் ஐயா ம.பொ.சி. அவர்கள் அடிமை இந்தியாவில் நாற்பதாண்டுக் காலம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சிறைத்துன்பத்தை அனுபவித்த தலைவர். சுதந்திர பாரதத்தில் புதிய தமிழகம் படைத்து அதன் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கும் தலைவர்.

ஐயா அவர்கள் சுதந்திரப் போராட்ட வரலாற்று நூல்கள் பலவற்றை எழுதியவர். இந்திய ஒருமைப்பாட்டு உணர்வைத் தனது சொற்பொழிவுகளின் மூலமும் நூல்களின் மூலமும் ஊட்டி வருபவர். இந்திய தேசிய வரலாறு தமிழகத்தைப் பொருத்தவரை சிலம்புச் செல்லவர் ஐயா ம. பொ. சி. அவர்களின் எழுத்துக்களின் மூலம்தான் பதிவாகி வருகிறது.

''வேதாரணியம் முதல் டில்லி ராஜ்கட்வரை'' என்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நூலையும் தமது தேசிய மணம் கமழும் எழுத்துக்களால் ஐயா சிலம்புச் செல்வர் எழுதியிருக்கிறார்கள்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு அளித்த சிலம்புச் செல்வர் ஐயா டாக்டர் ம. பொ. சி. அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகும்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

# யாது மாகி நின்றாய் பாரதி,
# எங்கும் நீ நிறைந்தாய்!

இந்திய சுதந்திர நாற்பதாண்டு விழாவை 1987 ஆகஸ்டு 15 தொடங்கி 1988 ஆகஸ்டு I5 வரை ஓராண்டு காலம் குமரி முதல் இமயம்வரை மாபெரும் தேசியத் திருவிழாவாகக் கொண்டாடினர் பாரத மக்கள். மத்திய அரசும் மாநிலங்களின் அரசுகளும் சீரிய முறையில் திட்டமிட்டு சிறப்பாகக் கொண்டாடின. தேசபக்தர்களால் நடத்தப்படும் தேசிய அமைப்புகளெல்லாம் கொண்டாடின. இந்திய அரசின் பொறுப்பிலுள்ள மிகச் சிறந்த பிரசார சாதனங்களான வானொலியும், தொலைக் காட்சியும் 1987 ஆகஸ்டு 9 முதல்15 வரையுள்ள ஒருவார காலம்-கலாசார ரீதியில் திட்டம் வகுத்து, சிறுவர் முதல் முதியோர் வரை மகிழும் வகையில் கொண்டாடின. இந்த காலத்திலே, இரவு பகலாக இல்லந் தோறும் குடும்பம் குடும்பமாக மக்கள் வானொலிப்பெட்டி முன் அமர்ந்து விழா நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். அதுபோல, தொலைக்காட்சிப் பெட்டிமுன் அமர்ந்து ஆடல்-பாடல்-நாடகம் திரைப்படம்-உரையாடல் ஆகிய நிகழ்ச்சிகளைக் கண்டு, தங்கள் இதயத்தே வளர்ந்து வரும் தேச பக்தியை வலுப்படுத்திக் கொண்டனர்.

சுதந்திர நாற்பதாண்டு விழாவில் பாரதப் பெருநாடெங்கணும் இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய தேசியக் கவியான பாரதியாரின் தேசிய-தெய்விகப் பாடல்கள் இசை நயத்தோடு ஒலித்தன. பாரதி, தான் அவதரித்ததன் பலனை இந்த நாற்பதாமாண்டு விழாவில்தான் பெற்றார். சுதந்திரம் பெற்றபின் நாற்பதாண்டு தேவைப்பட்டது, மகாகவி பாரதியாரை நாடு முழுவதற்குமான தேசியக் கவியாக ஏற்பதற்கு!

நாற்பதாண்டுகட்கு முன் சுதந்திரம் பெற்ற ஆகஸ்டுப் பதினைந்திலேகூட, பாரதியாரின் பாடல்கள் தமிழ் நாட்டள வில்தான் பயன்படுத்தப் பெற்றன. பின், கால் நூற்றாண்டு கழித்து 1972 ஆகஸ்டுப் பதினைந்திலே நடந்த இந்திய சுதந் திர வெள்ளி விழா நாளிலேயும் வேங்கடத்துக்கு வடக்கே பாரதியாரின் பாடல்களைப் பாடுவாரில்லை. ஆனால், இந்திய சுதந்திர நாற்பதாண்டு விழாவில் பாரத தேச மெங்கும் பாரதியாரின் பாடல்கள் ஒலித்தன.

நாற்பதாமாண்டு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே-அதாவது, ஆகஸ்டு 2 ஆம் நாளிலேயே சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இந்திய, இலங்கை உடன்படிக் கையை வரவேற்கும் பொதுக் கூட்டத்திலே, "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று பாரதியார் பாடினார். அந்தப் பாலம்தான் இந்திய-இலங்கை உடன் படிக்கை" என்று இந்தி மொழியாளரான பிரதமர் ராஜீவ் காந்தி பேசினார்.

சிங்களத் தீவையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் இருந்திருந்தால், யாழ்ப்பாணத்தை சிங்களப்படை பொருளா தார ரீதியில் முற்றுகையிட்ட நாளிலே, இந்திய இராணுவம் பாலத்தைக் கடந்து சென்று, அந்த முற்றுகையை முறியடித் திருக்கும். அந்தக் குறையை இந்திய-இலங்கை உடன் படிக்கை மூலம் தீர்த்துவிட்டார் பிரதமர் ராஜீவ் காந்தி. ஆம்; இந்த உடன்படிக்கையே பாலமாகிவிட்டது. அந்த இந்திய-இலங்கை உடன்படிக்கையையே பாலமாகக் கொண்டு, இந்திய இராணுவம் இலங்கைக்குள் புகுந்து விட்டது அமைதிப்படை என்ற பெயரிலே!

பாரதப் பிரதமரின் தாய்மொழி தமிழல்ல; இந்தி மொழி, ஆயினும், பாரதியின் பாடலைச் சரியாகவே புரிந்து கொண்டு அதனை உவமையாகக் கூறினார்.

மகாகவியின் ஆன்மா விண்வெளியி லிருந்துவண்ணம் பிரதமர் ராஜீவ் காந்தியை வாழ்த்தியிருக்கும். அவர் மரணத்தை வென்ற மகாகவியல்லவா!

அதனாற்தான், ''இராமன் ஆற்றின் வீழ்ந்தான்; கிருஷ்ணன் வேடன் விட்ட கணையால் மாண்டான்; பலர் புகழும் இயேசு சிலுவையில் அறையுண்டான்'' என்று அவதார புருஷரகளின் அவல முடிவுகளைச் சொல்லி, ''நான் மட்டும் சாகாமல் இருப்பேன் காண்பீர்'' என்றான்.

ஆகஸ்டு 2 ஐ அடுத்து ஆகஸ்டு 9-ல் பம்பாயில் மராத்தி அரசு நடத்திய சுதந்திர நாற்பதாண்டு விழாவிலே பிரதமர் ராஜீவ் கலந்து கொண்டார்.

அந்த விழா அரங்கிலே பாரதியாரின் ''பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்'' என்ற தமிழ்ப்பாடல் பள்ளிப் பிள்ளைகளால் பாடப் பெற்றது,

ஆகஸ்டு 13-ல் டில்லி நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்திலே நடந்த சுதந்திர நாற்பதாண்டு விழா அரங்கில் பேசிய பிரதமர், சபாநாயகர், ஜனாதிபதி ஆகியோரெல்லாம் பாரதியாரின் பாடல் வரிகளை உவமையாகக் கையாண் டனர்.

ஆகஸ்டு 15-அன்று காலை டில்லி செங்கோட்டையில் பிரதமர் ராஜீவ் தேசியக் கொடி ஏற்றிய விழாவிலேயும், பாரதியின் தமிழ்ப்பாடல் வரிகளை அவர் உவமை காட்டிப் பேசினார். ஆம்! இந்தி மொழியாளரான நமது பிரதமர் பாரதியின் சொந்தக்காரராகி விட்டார்.

செங்கோட்டை விழாவிலே பள்ளிப் பிள்ளைகள் பாரதத் தின் பல மொழிகளிலே பாடியது போல் தமிழ் மொழியிலேயும்

பாரதியாரின் பாடலைப் பாடினர். "அச்சமில்லை அச்சமில்லை" அச்சமென்ப தில்லையே!" என்பதே அந்தப் பாடல்!

ஆகஸ்டு பதினாறாம் நாள் காலையிலே காந்தி சமாதி முன்பு மாநிலங்களிலிருந்து விடுதலை வீரர்களாலும், விளையாட்டு வீரர்களாலும் கொண்டு வரப்பட்ட புனித மண் கலசங்களை குடியரசுத் தலைவர் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சிலேயும் பல மொழிகளிலே உத்தரப் பிரதேச மாணவ-மாணவியர் பாடினர். அவர்கள், "செந்தமிழ்" நாடெனும் போதினிலே" என்னும் அருமையான பாட்டையும் இசை நயத்தோடு பாடினர். ஆம்; "செந்தமிழ்" என்னும் வாசகத்திலுள்ள 'ழ' கரத்தைப் பிழையற உச்சரித்தனர்.

மறந்து விட்டேனே, சுதந்திர நாற்பதா மாண்டையொட்டி தமிழகத்தில் நடந்த நிகழ்ச்சிகளிலேயும் பாரதியாரின் பாடல்கள் பாடப்பட்டன!

தூத்துக்குடி, வேதாரணியம், திருப்பூர், மணியாச்சி, சென்னைக் கடற்கரையிலுள்ள திலகர் கட்டம் ஆகிய ஐந்து இடங்களில் புனித மண் எடுக்கும் நிகழ்ச்சிகளிலேயும் பாரதியார் பாடல்கள் முழுசாகவே பாடப்பட்டன. இந்த ஐந்து புனித இடங்களும் தமிழ் நாட்டுப் பதிகளல்லவா!

இதைவிடவும் புதுமை என்னவென்றால், ஆகஸ்டு 9-ஆம் நாள் காலை சென்னை சட்ட மன்ற மண்டபத்திதிலே நடந்த எம். எல். ஏக்கள் சிறப்புக் கூட்டத்திலேயும் பாரதியார் பாடல்கள் செல்வாக்கு செலுத்தியதாகும்.

அந்தக் கூட்டத்தில் தலைமை வகித்த பஞ்சாபியான ஆளுநர் எஸ். எல். குரானா பாரதியார் பாடலை உவமை காட்டிப் பேசினார்.

அவர் தொடங்கி வைத்ததை அவருக்குப் பின்பு தமிழர்களான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்து பின்பற்றினர்.

முஸ்லிம் லீக் எம். எல். ஏவான ஜனாப் அப்துல் சமத் மற்றவர்களை வெற்றி கொள்ளும் வகையிலே பாரதியாரின் பாடல்களை இதய எழுச்சியோடு எடுத்துக் காட்டினார்.

எல்லோரும் ஒரு சில வரிகளையே உவமை காட்டினரென்றால், நிதிய மைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் பாரதி பாடலொன்றின் பெரும் பகுதியை இசை நயத்தோடு பாடினார். அன்று சட்ட மன்ற மண்டபத்திற்கு பாரதியின் ஆன்மாவும் வந்து இருக்கும்.

காங்கிரஸ் சார்பில் திருமதி யசோதா, தி. மு. க. சார்பில் முன்னாள் நிதியமைச்சர் கே. மனோகரன், மார்க்சிஸ்டு சார்பில் திரு. ரமணி, அகில இந்திய கம்யூனிஸ்டு சார்பில் திரு. ருத்ராபதி, ஜனதா சார்பில் திரு. ஆறுமுகம் ஆகியோர் பாரதியாரின் பாடல்களைத் தொட்டுத் தொட்டுப் பேசியதைக் கேட்டு மகிழ்ச்சியடையாத உள்ளமே இல்லை எனலாம்.

இப்படி, பாரதியாரின் பாடல்களைக் கொண்டே இந்திய சுதந்திர நாற்பதாண்டு விழாவைப் பாரதம் கொண்டாடியது. மேலே சொன்ன நிகழ்ச்சிகள் அனைத்திலும் கலந்து கொண்டு, அங்கெல்லாம் ஒலித்த பாரதியாரின் பாடல்களைக் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தேன்.

நான் எழுத எடுத்துக் கொண்ட பொருள் ''வேதாரணிய முதல் ராஜ் கட்டம் வரை'' என்பதாகும். அதற்கு முன்னுரை தான் இவ்வளவும்.

# விடுதலை வீரர்களும் சாதனை வீரர்களும்

"பாரதம் சுதந்திரம் பெற்று நாற்பதாண்டு நிறைவுறு வதையொட்டி, 1987-ஆம் ஆண்டு ஆகஸ்டு 9 தொடங்கி 15 வரை விழா கொண்டாடப் படும்" என்பதாக, மத்திய அரசு அறிக்கை வெளியிட்டது.

அதை செய்தித் தாள்களில் படித்த போது. என் உள்ளம் துள்ளிக் குதித்தது. நாடு சுதந்திரம் பெற்று நாற் பதாண்டு நிறைவு பெறுவது மத்திய அரசு நினைவூட்ட வேண்டிய அவசியமில்லாமலே எனக்குத் தெரிந்திருந்தது. ஆயினும், இந்த நாற்பதாண்டு நிறைவை குமரிதொட்டு இமயம்வரை விழாக் கொண்டாடப் போவதாக மத்திய அரசு அறிவித்ததுதான் எனக்கு எல்லையற்ற தெம்பைத் தந்தது. அதனாற்றான், விழாக் கொண்டாடும் செய்தியை அறிந்த துமே எனது உள்ளம் துள்ளிக் குதித்தது.

"நாற்பது ஆண்டு முடிந்தால் அதற்கு ஒரு விழாவா?" என்று சில 'அன்பர்கள்' கேட்கின்றனர். "சுதந்திரம் பெற்று இருபத்தைந்து ஆண்டு நிறைவுற்றபோது, 'வெள்ளி விழா' கொண்டாடினார்கள்; அது சரி அடுத்து, எதிர் காலத்தில் ஐம்பதாண்டு நிறைவுறும்போது பொன் விழா கொண்டாடி னால், அதுவும் நியாயம். இந்த இரண்டுக்கும் இடையிலே. நாற்பதாம் ஆண்டில் விழாக் கொண்டாடுவதற்கு என்ன பின்னணியோ?" என்று எதிர்க் கட்சி பத்திரிகை ஒன்று 'ஒலி' எழுப்பியது.

அதைப் படித்தபோது வாய்விட்டுச் சிரித்தேன். மதத் திலோ, இந்தியாவுக்கென அமைந்துள்ள தனிப்பட்ட கலா

சாரத்திலோ அறிவுடையவர்கள் —நம்பிக்கையுடையவர்கள் —இப்படி வினாஎழுப்பி விதூஷகம் செய்ய மாட்டார்கள்.

''நாற்பது'' என்பது ஒரு மண்டலத்தைக் குறிக்கும். அதனால், திருக்கோயில்களிலே குடமுழுக்கு விழா நடத்து முன் நாற்பது நாள் அளவிலே ''மண்டல பூஜை'' நடத்துவது உண்டு.

சித்த—ஆயுர்வேத மருத்துவரிடம் சென்றால், அவர், தேவைப்படுகின்ற ஒரு மருந்தை நோயாளியின் கையில் கொடுத்து, 'இதனை நாள் தவறாமல் ஒரு மண்டலம் வரை சாப்பிடு' என்று சொல்லுவார்.

இந்தியக் கலாசாரப்படி ''அறுபது'' என்னும் எண்ணுக்கும் ஒரு மதிப்பு உண்டு. அதனால்,ஒருவருக்கு அறுபதுவயது நிறைவுபெறும் போது, 'சஷ்டியப்த பூர்த்தி' கொண்டாடுவார்கள். அதற்கு தமிழ்ப் பற்றாளர் ''மணி விழா'' என்று தூய தமிழிலே மாற்றுப் பெயர் தந்துள்ளனர்.

ஒரு நூறு வயது வரை வாழ்ந்திருக்க எவரேனும் கொடுத்து வைத்திருந்தால், ''சதாபிஷேகம்'' என்ற பெயரில் அவருக்கு விழாக் கொண்டாடுவார்கள் அது எல்லோருக்கும் சித்திப்பதில்லையாதலால், எண்பதாம் ஆண்டிலேயே சதாபிஷேகம் கொண்டாடுவர்.

கால் நூற்றாண்டு நிறைவுறுங்கால் ''வெள்ளி விழா'' வையும், அரை நூற்றாண்கு நிறைவுறுங்கால் ''பொன் விழா''வையும் கொண்டாடுவது இந்திய கலாசாரத்தை ஒட்டியவையல்ல. பிறந்த நிலத்தாலும், பேசும் மொழியாலும், பின்பற்றிய கலாச்சாரத்தாலும் இந்தியருக்கு முற்றிலும் அன்னியராகி விட்ட ஆங்கிலேயர் நம்மை ஆண்ட காலத்திலே, அவர்களிடமிருந்து 'வெள்ளி விழா'வை 'விலை'க்கு வாங்கினோம். 'பொன் விழா''வையுப் இரவல்

பெற்றோம். அதனால், நாற்பது நிறைவுபெறும் போது நடைபெற வேண்டிய மண்டல் விழாவை மறந்தே போனோம்! நல்ல வேளையாக, இந்திய நாட்டை ஆள்வோருக்கு மண்டல விழாவும் கொண்டாடும் வழக்கம் உண்டு என்பது நினைவுக்கு வந்ததே, அதற்நாக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நம் நாடு சுதந்திரம் பெற்று நாற்பத்தோராண்டாகிறது, எனக்கோ வயது எண்பத்திரண்டு ஆகிறது. அதிலே, பிற் பாதிக் காலத்தில் சுதந்திர இத்தியாவில் வாழும் பேறு பெற்றேன். அதற்கு முற்பாதியான நாற்பத்தோரு ஆண்டுக் காலத்தில் அன்னியராட்சியில் அடிமையாக வாழ்ந்து அல்லலுற்றேன்.

அந்த நாற்பத்தொரு ஆண்டிலே சரியாக இருபது ஆண்டுக் காலம் விடுதலைப் போர்க்களத்தில் இருந்தேன். ஆம்; வயது வந்த பருவததை அடைந்ததுமே இறைவன் என்னை போர்க்கனத்தில் புகுத்தி விட்டான்.

இந்திய அரசு சுதந்திர நாற்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கென வகுத்த திட்டமானது என்னைப் பெரிதும் கவர்ந்தது. அந்தத் திட்டத்திலே ஒரு பகுதியான, நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போரிலே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நடந்த இடங்களை புனிதப் பதிகளாகத் தேர்ந்தெடுத்து, அந்த இடங்களிலே விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்களையும வீராங்கனைகளையும் கொண்டு புனிதமண் எடுத்து டில்லிக்குக் கொண்டு வரச் செய்யும் அம்சம் என்னனப் பெரிதும் கவர்ந்தது.

நான் பழமையில் நம்பிக்கயுடையவன். அதுபோல, புதுமையிலும் நாட்டமுடையவன். இந்திய அரசு நாற்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாட வகுத்த திட்டத்திலே

பழமைக்கும் புதுமைக்கும் இடமளித்தது. இறைவனை, "முன்னைப் பழம் பொருட்கும் முன்மைப் பழம் பொருளே" என்றும், "பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றி யனே" என்றும் மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

பழமையும் புதுமையும் கல்ந்ததுதான் உயிர்க்குலத்தின் வரலாறு. இந்தியாவின் விடுதலை வாழ்வுமட்டும் இதற்கு விலக்காகி விடாது அல்லவா! இந்த உண்மையை உணர்ந்து, நாற்பதாண்டுகளுக்கு முன்பு சுதந்திர பாரதத்தைப் படைக்க நடந்த போராட்டத்தை 'பழைமை' என்றும், சுதந்திரம் பெற்றபின் நவபாரதம் படைக்க நாற்பதாண்டுக் காலம் நடந்து வந்துள்ள முயற்சியைப் 'புதியது' என்றும் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சி மதிப்பிட்டது. அந்த மதிப்பீட்டை நான் பெரிதும் மதிக்கிறேன்.

இப்படியொரு புதிய கண்ணோட்டத்தை சுதந்திர வெள்ளி விழாவின்போதே மத்திய அரசு பெற்றிருக்க வேண்டும். 15-8-72ல் ஒரு நாள் அளவில் நாடெங்கும் வெள்ளி விழா கொண்டாடியதோடு திருப்தியடைந்தது திருமதி இந்திரா காந்தியை பிரதமராகக் கொண்டிருந்த இந்திய அன்னையின் ஆட்சிக் காலத்தில் தவறவிட்ட ஒன்றை மைந்தனின் அரசு ஆட்சிக் காலத்தில் கடைப்பிடிக்கத் தொடங்கியது மத்திய அரசு,

குமரிமுதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரத நில பரப்பிலே ஒவ்வொரு அங்குல நிலமும், அந்த நிலப்பரப்பி லுள்ள ஒவ்வொரு துளி மண்ணும் புனிதமானவையே. ஆகவே, 'புனித மண்ணை எடுப்பதற்கு இந்திய தேச பக்தர் கள் ஊரைத் தேடி அலைவானேன்?' என்றொரு வினா எழுப் பினர் புனிதத்தை மூடநம்பிக்கையாகக் கருதி வருவோர்.

"ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம் நல்ல பாரத நாடு" என்கிறார் விடுதலை வீரரான மகாகவி பாரதி, "பாரதம்" என்ற சொல்லுக்கு "ஞானம்" என்று பொருள் சொல்கிறார், தெய்வ பக்திக்கும் தேசபக்திக்கும் பிணைப்பு

கண்ட பாரதியார். அத்தகைய ஞானத் திருநாட்டிலே புனித மண் எடுப்பதற்கு ஊரைத் தேடி ஓட வேண்டியதில்லை தான்! ஆயினும், விடுதலைப் போரை நினைவில் கொண்டு புனிதப் பதிகளைத் தேர்ந்தெடுத்தன மத்திய அரசும் மாநில அரசுகளும்.

அந்தப் புனிதஇடங்களிலே எடுத்த மண்ணை டில்லிக்குக் கொண்டுவர விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தியாக முத்திரை பெற்ற வீரர்களிலே மாநிலத்திற்கு இருவரைத் தேர்ந் தெடுத்தது மத்திய அரசு. அவர்களிலேயும் ஒருவர் ஆணாக வும் மற்றொருவர் பெண்ணாகவும் இருக்க வேண்டும் என்று புதுடில்லி விதி வகுத்தது. ''ஆணும் பெண்ணும் சமமெனக் கொண்டிடில்' அறிவிலோங்கியிவ் வையந்தழைக்குமாம்'' என்றார் பாரதியார்.

நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின் நாம் சூன்யத்தில் இருக்கவில்லை. கடந்துபோன நாற்பதாண்டுகளிலே சாதனைகள் புரிந்து உலகோர் மெச்சத் தக்க நிலையிலே புதிய சரித்திரத்தைம் படைத்திருக்கிறோம்.

நம்முடைய சாதனைகள் ஒன்றா, இரண்டா? எண்ணி லடங்காதன. நாம் சாதனைகள் புரிந்தது மண் பரப்பான இம்மல்லன்மா ஞாலத்தில் மட்டுமா? அதிலும்தான். அதற்கு மேலும் விண் பரப்பிலும் சாதனைகள் புரிந்திருக்கிறோம். வீர விளையாட்டுகளிலும் சாதனைகள்புரிந்திருக்கிறோம்.

இதை நினைவில் கொண்டு, கடந்தநாற்பதாண்டுகளிலே விளையாட்டுகளிலே சாதனைகள் புரிந்த வீரர் களையும் தேர்ந்தெடுத்து, அவர்களையும் கௌரவிக்க மத்திய அரசு திட்டமிட்டது. அதனால், மாநிலத்திற்கு இரு விளையாட்டு வீரர்களையும் தேர்ந்தெடுப்பதைத் தனது திட்டத்திலே சேர்த்தது அந்த சாதனை வீரர்களிலும் ஆண் ஒருவர் பெண் ஒருவர் என்று இருக்க வேண்டும் என்பதும் மத்திய விழாக் குழுவின் கட்டளை.

# வேதாரணியத்தின் புனித வரலாறு

மத்திய அரசு கேட்டுக் கொண்டபடி, புனித மண் எடுப்பதற்காக. புனித இடங்கள் ஐந்தைத் தேர்த்தெடுத்தது தமிழக அரசு. அவை வருமாறு:

வேதாரணியம், தூத்துக்குடி, மணியாச்சி, திருப்பூர், சென்னை.

இந்த ஐந்து புனிதத் தலங்களில் மண் எடுக்க ஐந்து தியாகிகளையும் தேர்ந்தெடுத்தது. அவர்கள் பெயர்கள் வருமாறு :

ம. பொ. சிவஞானம், எஸ். என். சோமயாசுலு எல். கிருஷ்ணசாமி பாரதி, பெரியண்ண முதலியார், த. செங்கல்வராயன்.

என் பொறுப்பில் விடப்பட்ட வேதாரணியத்தில்தான் மூதறிஞர் ராஜாஜி, 1930 ஏப்ரல் மாதத்தில் உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி வைத்து, 9 மாத சிறைத் தண்டனை பெற்றார். உப்புச் சட்டத்தை மீறி, அரசு உப்பளத்தில் உப்பை அள்ள வடக்கில் ''தண்டி'' எனப்படும் கடற்கரைச் சிற்றூரைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார். இந்தச் செய்தி வெளியானதுமே உலகோர் கவனமனைத்தும் தண்டியிடமே சென்றது.

காந்திஜி 1930 மார்ச்சு 12 ஆம் நாளிலே, அகமதாபாத்திலுள்ள தமது சபர்மதி ஆசிரமத்திலிருந்து ஆசிரம வாசிகளான 88 பேருடன் புறப்பட்டு, தண்டி நோக்கி கால் நடையாக யாத்திரை சென்றார். அப்போது அவருக்கு வயது 61.

சபர்மதியிலிருந்து 241 கல் தொலைவிலுள்ளது தண்டி. தினம் 10 கல் தூரம் நடந்து, 24 நாட்களில்—அதாவது, 1930 ஏப்ரல் 5 ஆம் நாளிலே காந்தியடிகள் தம்முடைய படையுடன் தண்டி சேர்ந்து விட்டார். முதிய பருவத்தில் அடிகள் மேற்கொண்ட இப்புனித யாத்திரை நாட்டிலுள்ள கோடிக் கணக்கான மக்கள் அவரை தெய்வமாகவே கருதச் செய்தது.

பண்டித மோதிலால் நேரு, பண்டித ஜவகர்லால் நேரு ஆகிய பெருந்தலைவர்கள் சபர்மதியிலிருந்து நெடுந்தூரம் அடிகளுடன் நடந்தே சென்று, அவரை வழியனுப்பி வைத்தனர். உலகிலுள்ள பல நாடுகளிலிருந்து பத்திரிகைச் செய்தியாளர்களும், காமிராக் கருவிகளுடன் புகைப்படமெடுப்போரும் வந்து சபர்மதியிலிருந்து காந்தியடிகளைப் பின் தொடர்ந்தனர்.

புராணத்திலே ஒரு கதையுண்டு. அதாவது, வட இமயத்திலே சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தபோது, திக்கெட்டிலுமுள்ள முனிவர்களும், வானுலகத் தேவர்களும் அந்தத் திருமணத்தைப் பார்த்து மகிழ இமய மலையில் திரண்டு விட்டனராம். அதனால், வடபுலத்திற்கும் தென்புலத்திற்கும் அதுவரை இருந்து வந்த சமநிலை மாறி, பார மிகுதியால் வடக்கு தாழ்ந்தும், பாரமின்மையால் தெற்கு உயர்ந்தும் விட்டனவாம்!

இந்த நிலை கண்டு சிவபெருமான் அதிர்ச்சியடைந்தாராம! ஆம்; வடக்கும் தெற்கும் எப்போதும் எதிலும் சமநிலையிலிருக்க வேண்டுமென்பது புராணக் கதை நிகழ்ந்த காலத்திலேயே கடவுள் சித்தம் போலும்! ஆகவே, அகத்திய முனிவரை அழைத்து, திருமணம் பார்க்கும் ஆசையைவிட்டு தென்திசைச் செல்லுமாறு ஆணையிட்டாராம்!

முனிவர், உடலால்குறுகியிருப்பினும் ஆன்ம பலத்தாலும் தமிழ்ப் புலமையாலும் சிவபக்தியாலும் பாரம் மிகுந்தவராம்!

ஆயினும், சிவபெருமானின் ஆணையை ஏற்கு முன், "திருமணத்தைப் பார்க்க முடியாமற் போகிறதே!" என்று வருந்தினாராம்!

அப்போது, "தெற்கே திருமறைக் காட்டில் பார்வதியோடு கூடி மணக் கோலத்துடன் காட்சியளிப்போம்" என்று சிவன் உறுதி கூறினா ராம்! அப்படியே காட்சியும் தந்தாராம்! அப்பதி "அகத்தியான் பள்ளி" என்று பெயர் பெற்றுள்ளது. அது, வேதாரணியத்திற்கு ஒரு கல் தொலைவிலுள்ளது, ராஜாஜி உப்பெடுத்தது அகத்தியான் பள்ளியில்தான்.

வேதாரணியத்திலே சிவன் கோயிலும், அடுத்துள்ள அகத்தியான் பள்ளியில் அகத்தியர் கோயிலுமுள்ளன. அகத்தியருக்கு இங்குமட்டும்தான் கோயிலிருக்கிறதாம்.

மனிதாத்துமாக்களிலே சிறந்த மகாத்மா தண்டியில் தாம் உப்பெடுக்கப் போவதாக அறிவித்ததுமே, உலகோர் கவனம் அங்கு சென்று விட்டதால், மீண்டுமொரு முறை—ஆம்; புராண காலத்தைப் போல இந்த சரித்திர சகாப்தத்திலும் வடக்குக்கும் தெற்குக்குமிடையில் நிலவிய சமநிலை கெடவிருந்தது. புகழ் மிகுதியால் வடக்கு தாழ்ந்து, புகழின்மையால் தெற்கு உயரும் நிலை ஏற்பட விருந்தது.

அந்த நேரத்திலே, காந்தியடிகள், தெற்கில் சத்தியாக்கிரக யாத்திரை செய்து, வடக்கையும் தெற்கையும் சமப்படுத்துமாறு ராஜாஜிக்கு ஆணையிட்டார். ராஜாஜியும் ஒழுக்கத்தால்—அறிவால்—ஆற்றலால் அகத்திய முனிவர் போன்ற தமிழ் முனிவர்தான்!

காந்திஜி வட புலத்தில் மார்ச்சு 12-ல் தண்டி யாத்திரையைத் தொடங்கியதும், தெற்கில் ஏப்ரல் 13-ல் தாம்

வேதாரணியத்தை நோக்கி திருச்சியிலிருந்து யாத்திரை புறப்படப் போவதாக ராஜாஜி அறிக்கை விட்டார். அதனால் உலகோர் கண்கள் வேதாரணியத்தையும் நோக்கின.

ராஜாஜி வேதாரணியத்திற்கு தனியாகச் செல்ல வில்லை. லண்டனில் தங்கிப் படித்த மாணவப் பருவத்திலே வீர சவர்க்கர். வ. வே. சு. ஐயர் ஆகியோருடைய சகவா சத்தால் புரட்சியுள்ளம் பெற்ற தேசபக்தரான டாக்டர் டி. எஸ். எஸ். ராசன் இல்லம் திருச்சி நகரிலுள்ளது. அவரு டைய இல்லத்திலிருந்து, ஆய்ந்து ஆய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட 98 தேசபக்த மாவீரர்களுடன் சித்திரைத் திங்கள் முதல் நாளிலே—ஆம்: தமிழருக்குப் புத்தாண்டு பிறந்த நன்னாளிலே யாத்திரையைத் தொடங்கி னார். சரியாக 100 கல் தூரத்தை தம் சகாக்களுடன் நடந்தே கடந்து ஏப்ரல் 29 ல் ராஜாஜி வேதாரணியத்தை அடைந்தார் அப்போது அந்த அகத்தியருக்கு வயது51.

ராஜாஜி உப்பெடுத்து போர்க்களமாக்கிய வேதாரணிய உப்பளத்தின் அகல நீளத்தை அளந்து காட்டுகிறது, தமிழி லுள்ள கலைக்களஞ்சியம்.

"வேதாரணியத்தில் 5 மைல் அகலமுள்ள ஓர் உப்பளம் உள்ளது. இங்கிருந்து சுமார் 30 மைல் நீளமுள்ள உப்பளம் 'வேதாரணிய உப்பளம்' என வழங்கப்படுகிறது. இது, தமிழ கத்தில் மிகப் பெரிய உப்பளமாகும். வேதாரணியத்தில் மட்டும் ஆண்டு தோறும் 20 லட்சம் டன் உப்பெடுக்க இயலும்."

('கலைக் களஞ்சியம்', தொகுதி 9; பக்கம் 523

வேதாரணியத்தில் ராஜாஜி உப்பெடுத்து அந்தப்பகு திக்கு—பகுதியின் மண்ணுக்கு—புனிதம் சேர்க்கு முன்பு

கி.பி.ஏழாம் நூற்றாண்டிலே (சரியாக 1300 ஆண்டுகட்டு முன்பு) சைவ சமய ஆசாரியர் நால்வரில் முதலிருவரான திருஞான சம்பந்தரும் அப்பரும் சென்று, மூடிக்கிடந்த சிவன் கோயிலை தமிழால் பாடித் திறந்தார்களாம். இந்தப் பெருமையை, "மறைக் கதவினைத் திறந்தது கன்னித் தண்டமிழ்ச் சொல்லோ, மறுபுலச் சொல்லோ?" எனப் பெரு மிதத்தோடு பாடுகின்றார் ஒரு புலவர்.

இவர்களுக்கு முன்பு நால்வேதங்களும் இந்த ஊரில் இறைவனைக் காண விரும்பி பூசை செய்தனவாம்! அதனாற் றான், வேதாரணியம் எனப் பெற்றதாம்.

# மாநிலத் தாயைக் கும்பிட்டு புனிதமண் எடுத்தேன்!

வேதாரணியம் சென்று புனித மண் எடுத்து வர முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். விடுத்த அன்புக் கட்டளையை மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக் கொண்டேன் என்றாலும், பயணத்திட்டம் வகுப்ப தற்குப் பெரிதும் சங்கடப்பட்டேன்.

முதுமைப் பருவம் காரணமாகவும், ஒரே மகனை இழந்த பின் என் உள்ளம் சோர்ந்து விட்டதன் விளைவாகவும் சமீப மாதங்களில் நான் மோட்டார் மூலமாகவோ, ரயில் மூல மாகவோ நெடுந்நூரம் பயணம் செய்வதைத் தவிர்த்து வரு கிறேன். முடிந்தவரை விமானப் பயணத்தையே மேற் கொண்டு வருகிறேன். ஐம்பது கல் தொலைவுக்கு மேல் மோட்டாரில் சென்றால் உடம்பு தெம்பிழந்து சோர்ந்து விடு கிறது. ரயிலில் சென்றால், இரவில் உறங்கும் நேரம் குறைந்து விடுகிறது.

ரயிலில் மயிலாடுதுறைக்குச் சென்று, அங்கிருந்து மோட் டாரில் வேதாரணியத்தை அடைந்து, அங்கு மண் எடுக்கும் பணி முடிந்ததும், அன்றிரவே தஞ்சையில் ரயில் ஏறி, மறு நாள் காலை சென்னை வரக்கூடிய வகையில் பயணத் திட்டத் தைத் தயாரித்தேன். அதன்படி, ஆகஸ்டு 6 ஆம் நாள் இரவு செங்கோட்டை பாசஞ்சரில் சென்னையிலிருந்து புறப்பட்டு, மறுநாள் காலை மயிலாடுதுறை ரயில் நிலையத்தை அடைந் தேன்.

விடுதலைப் போரில் சிறை சென்ற தியாகியும், நான் காங்கிரசில் இருந்த காலத்தில் தானும்எனது தமிழரசுக்

கழகத்திலே இணைந்திருந்து பல்லாண்டுக் காலம் பணியாற்றியவருமான திரு. ஏ. எம். இஸ்மாயில் அவர்களும், ஸ்தல அதிகாரிகளும், திரு. ப. இராசமாணிக்கம் உள்ளிட்ட தமிழரசுக் கழகத் தோழர்களும் ரயில் நிலையத்தில் என்னை வரவேற்றனர். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சிற்றுண்டி அருந்திய பின்னர், மோட்டாரில் மயிலாடுதுறையிலிருந்து புறப்பட்டு நேரே வேதாரணியம் சென்றேன்.

மயிலாடுதுறையிலிருந்து மோட்டாரில் சுமார் அறுபது கல் தூரம் பயணம் செய்து வேதாரணியத்தை அடைந்த போது பிறருடைய துணையோடுதான் மோட்டாரிலிருந்து இறங்க வேண்டியவனானேன். தஞ்சை மாவட்டத்தில் மோட்டாரில் நெடுந்தூரம் பயணம் செய்வதென்றால், அது 82 வயதில் சாத்தியமில்லை. மாவட்டம் முழுவதும் விவசாய பூமியானதால், நிலச்சுவான்தார்கள் கருணை காட்டி மிச்சமாக விட்ட இடங்கள்தான் மக்கள் நடப்பதற்கும் வண்டிகள் செல்வதற்குமான சாலைகளாக உள்ளன. வண்டி செல்ல முடியாத ஒற்றையடிப் பாதைகளுமுண்டு.

''நெடுஞ்சாலை'' என்று சொல்லத்தக்க வகையிலே நீண்ட சாலை ஒன்று கூட இருக்கவில்லை.குறுகிய சாலைகளும் வளைந்து வளைந்துதான் செல்லும், மேடு பள்ளங்களையும் சந்திக்க வேண்டுமாதலால், மோட்டார் வண்டி அந்தப் பள்ளங்களில் விழுந்து விழுந்து எழுந்து செல்லும். எப்படியோ வேதாரணியம் போய்ச் சேர்ந்தேன்.

தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு. மா. ராமு அவர்களும், அவருக்கு அடுத்த நிலையிலுள்ள அரசு அதிகாரிகளும், வேதாரணிய உப்புச்சத்தியாக்கிரகத்தின்போது ஸ்தல தளபதியாகத் திகழ்ந்த சர்தார் வேதரத்தினம் அவர்களின் மகன் திரு. வே. அப்பாக்குட்டியும், மற்றும் சில காங்கிரஸ் பிரமுகர்களும் என்னை பயணிகள் பங்களாவில் வரவேற்று உபசரித்தனர்.

காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படும் சிலர் பயணிகள் பங்களாவில் எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்கள். 28 ஆண்டுகள் காங்கிரசில் இருந்தவன் என்றாலும், என்னைச் சந்தித்த காங்கிரஸ்காரர்களிலே ஒருவரைக்கூட என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. நண்பர் அப்பாக் குட்டி ஒருவர்தான் என்னை அறிந்தவர்; என்னாலும் அறிந்து கொள்ளப்பட்டவர். அவரைப் பார்த்தது எனக்கு மிகுந்த தெம்பைத் தந்தது.

காங்கிரசிலே, "பழையவர் கழிந்து புதியவர் தோன்றி விட்டனர்" என்று சொன்னால் மட்டும் போதாது; அந்தப் புதியவர்களே நிரம்பிவிட்டனர் என்றும் சொல்லலாம் போலும்! வாழ்க, புதியவர் காங்கிரஸ்!

மாவட்ட ஆட்சியாளர் திட்டமிட்டபடி மாலை 3 மணிக்கு மோட்டாரில் புறப்பட்டு, ஆறு கல் தொலைவில் உள்ள அகத்தியான் பள்ளி என்னும் சிற்றூரை அடைந்தேன். வேதாரணியத்தில் ராஜாஜி உப்பு எடுத்தார் என்று வரலாறு சொல்லுகிறது என்றாலும், அவர் உப்பு எடுத்தது அகத்தியான் பள்ளியில்தான்.

அகத்தியான்பள்ளியில் மூதறிஞர் ராஜாஜி உப்பு எடுத்த இடத்திலே அந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் நினைவுச் சின்னம் ஒன்று திரு. சுப்பையா என்னும் ராஜாஜி பக்தரால் நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சின்னத்திற்கு அருகிலேயே ராஜாஜி கை வைத்து உப்பு எடுத்த இடமானது சாணத்தால் நன்கு மெழுகப்பட்டு, பல வண்ணங்களில் மாக்கோலம் இடப் பட்டு அழகு செய்யப்பட்டிருந்தது. அங்கு சிறிய அளவில் பந்தல் போடப்பட்டு, அமர்வதற்கான நாற்காலிகளோடு மேடையும் அமைக்கப்பட்டிருந்தது.

மாக்கோலம் இடப்பட்டிருந்த இடத்தைக் காட்டி, "இங்கு தங்கள் கையை வைத்து மண் எடுங்கள்" என்று

மாவட்ட ஆட்சியாளர் திரு. மா. ராமு சொன்னார். காங்கிரஸ்காரர்கள், தொலைக் காட்சி நிறுவனத்தார், வானொலி நிலையத்தார், காவல் துறையினர், அதிகாரிகள் ஆகியோர் என்னைச் சூழ்ந்திருந்தனர்.

அவர்களேயன்றி, தமிழக அரசின் தலைமைக் கொரடா துரை. கோவிந்தராசன், சிறு சேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் திரு. கோவி. நாராயணசாமி, திரு. செல்லமுத்து எம்.எல்.ஏ, சர்தார் வேதரத்தினம் குமாரர் திரு. வே. அப்பாக்குட்டி ஆகியோரும் இருந்தனர்.

மாவட்ட ஆட்சியாளர் கை காட்டிய இடத்திலே நான் என் இரு கைகளையும் நீட்டி புனித மண் எடுக்கத் தொடங்கி னேன். தரையை அகழ்ந்து மண் எடுக்கத் தொடங்குவதற்கு முன்பு, ராஜாஜியின் திருவடிபட்ட இடம் என்பதை நினைந்து அந்த இடத்தை என் இரு கைகளாலும் தொட்டுக் கும்பிட்டு, என் இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டேன்!

புனித நிலத்தில் முத்தமிடுவது மேனாட்டார் வழக்கம். நிலமகள் தாய்க்குச் சமமானவள். அதனாற்றான், சொந்த நாட்டைத் ''தாய் நாடு'' என்கிறோம். தாயை கும்பிட்டு வழிபடுவதுதான் வழக்கம். முத்தமிடுவது நமது மரபுக்கு ஒத்ததல்ல. ஐரோப்பியருக்கு அது சரியாக இருக்கலாம். அவர்கள் தமது சொந்த பூமியை 'தாய்நாடு' என்று சொல்வதில்லை. 'தந்தை நாடு' என்றுதான் சொல்கின்றனர். தாயை வணங்குவதற்காக பக்கிம் சந்திரர் சொல்லித் தந்த மந்திர மொழிதானே ''வந்தே மாதரம்!'' அதன் பொருளை விளக்கத்தானே, 'வந்தே மாதர மென்போம்- எங்கள் மாநிலத் தாயைவணங்குதும் என்போம்' என்று பாரதி பாடினார். பாரத பூமிக்கு 'பாரத மாதர்' என்பது தானே தேசபக்த மதத்தார் வைத்த பெயர்.

புனித நிலத்தை இரு கைகளாலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்ட பின்னர், முன்னங் கைகள் இரண்டையும் சேர்த்துக் குவித்து, மும்முறை மண் எடுத்தேன். முன்னரே நீரால் தரை நனைக்கப்பட்டிருந்ததால் மண் எடுப்பது சுலப மாக இருந்தது.

இந்த நேரத்திலே மங்கள வாத்தியங்கள் முழங்கின. என்னைச் சூழ்ந்திருந்தவர்கள் 'வந்தே மாதரம்' 'மகாத்மா காந்திக்கு ஜே' 'மூதறிஞர் ராஜாஜிக்கு ஜே' என்று பன்முறை உணர்ச்சி வயப்பட்டவர்களாகக் குரல் எழுப்பினர். என் வாயும் அந்த மந்திர மொழிகளை முணுமுணுத்தது.

என் இரு கைகளாலும் குவியல் குவியலாக மும்முறை மண் எடுத்து அருகில் வைக்கப்பட்டிருந்த ஐம்பொற் கலசத்தில் போட்டேன். என்னைப் பின்பற்றி மாவட்ட ஆட்சியாளர் திரு. மா.ராமு, தன் கைகளாலும் மண் எடுத்துப் போட்டு குடத்தை நிரப்பினார். நான் மண் எடுத்த நேரமானது சில நிமிஷ அளவில்தான் இருந்தது. அந்த நிமிஷங்களிலே என் உள்ளத்தில் எத்தனையோ விதமான எண்ணங்கள் அலை மோதின.

இந்துக்களுக்குரிய நான்கு வேதங்களும் மனித உடல் களைப் பெற்று தவம் செய்த புனித பூமியிலே மண் எடுக்கி றோம்!

பார்வதியை அருகிலிருத்தி திருமணக் கோலத்துடன் அகத்தியருக்கு சிவன் காட்சியளித்த தெய்வத் திருப்பதியில் மண் எடுக்கிறோம்!

புறச் சமயங்களின் தாக்குதலிலிருந்து அகச்சமயமான சைவத்தைக் காப்பதற்காக சம்பந்தரும் நாவுக்கரசரும் மூடப் பட்டிருந்த திருக்கோயில் கதவுகளை பாடித் திறந்த பாடல் பெற்றஇடத்திலே மண் எடுக்கிறோம்!

திருவிளையாடற் புராணம் படைத்த பரஞ்சோதி முனிவரும், பக்திப் பனுவல்களைப் புனைந்தளித்த தாயுமானவரும் தங்கள் பிள்ளைப் பருவத்திலே ஓடியாடித் திரிந்த புனிதப் பதியிலே மண் எடுக்கிறோம்!

சட்டத்தை மீறி உப்பு எடுத்து, அதற்காக ஒன்பது மாத தண்டனையடைந்து, தேசம் விடுதலை பெறுவதற்காக ராஜாஜி சிறை புகுந்த வீர வரலாற்றைப் படைத்த இடத்திலே மண் எடுக்கிறோம்!

இப்படியெல்லாம் என்னுடைய மனத்திலே எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அலைமோதிக் கொண்டிருந்த நேரத்திலே, நான் என்னை மறந்து மண் எடுத்து முடித்தேன்.

என்னை நான் மறந்திருந்த நேரத்திலே, வானொலி நிலையத்தைச் சேர்த்த இருவர் ஒலி பெருக்கியை என் முன்னே காட்டி, ''ஏதேனும் சொல்லுங்கள்!'' என்று கேட்டனர். அந்த நிலையிலே நான் மீண்டும் சிறிதளவு உணர்வு பெற்றேன். என் சூழ்நிலையை உணர்ந்தேன். ஆயினும், என் வாயிலிருந்து கருந்துச் செறிவோடு வார்த்தைகள் வரவில்லை. வானொலி நிருபரிடம் கண்களில் இன்ப நீர் மல்க, வாய் குழறி எதையோ நான் சொன்னேன். வார்த்தைகள் முழுமை பெறவில்லை.

புனித மண் எடுக்கும் பணி இத்துடன் முடிந்தது. அதன் பின்னர், சர்தார் வேதரத்தினம் மகன் திரு. வே. அப்பாக் குட்டியும், மாவட்ட ஆட்சியாளரும் திட்டமிட்டிருந்தபடி புனித மண் கலந்த ஐம்பொன் கலசத்தை இரு கைகளிலும் பக்தி விசுவாசத்தோடு நின்றவண்ணம் ஏந்தி மோட்டார் ஜீப்பில் வேதாரணியம் வீதிகளிலே வலம் வந்தேன்.

வீதிதோறும் இருபுறமும் மக்கள் நின்று என் இரு கை களாலும் நான் தாங்கிக்கொண்டிருந்த புனித மண் நிறைந்த ஐம்பொன் கலசத்தைக் கும்பிட்டனர். இது, பக்தி அறிவு! ஒவ்வொரு வீதியிலும் இரு புறங்களிலும் மக்கள் திரள் திரளாக நின்றவண்ணம் கலசத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

ஊர்வலம் முடிந்த பின்னர், ஒரு பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அந்தப் பூங்காவுக்கு ராஜாஜியின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக நினைவாக எழுந்த பூங்கா அல்லவா!

# மறைக்காட்டில் மாபெரும் பொதுக் கூட்டம்

வேதாரணியத்தில் யான் புனித மண் எடுத்த பின்னர் நடைபெற்ற ஊர்வலமும் பொதுக் கூட்டமும் அந்தப் பிரதேசத்து மக்களிடையேயுள்ள தேசபக்தியை உணர்த்துவதாக இருந்தன. அங்கு ராஜாஜி உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தி 57 ஆண்டுகளாகி விட்டன. ஆம்; அரை நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது! ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டவர்களில் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் அகஸ்தியான்பள்ளியில் ராஜாஜி உப்பு எடுத்துச் சிறைத் தண்டனை பெற்றதையும், அதை யாட்டி பல நாட்கள் தொண்டர்கள் சட்டத்தை மீறி கைதானதையும், போலீசார் நடத்திய தடியடிக் கொடுமையையும் நேரில் கண்டிருக்க முடியும். மற்றவர்களுக்கெல்லாம் கேள்வி ஞானமாகத்தான் இருக்க முடியும். அப்படியிருந்தும், வழிவழி கேட்டு வந்த காரணத்தால் நேரில் கண்டவர்களோடு உணர்ச்சியில் போட்டியிடும் வகையிலே பொதுக் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வேதாரணியத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் நடந்த பின்னர், அதன் ஸ்தல தளபதியாகத் திகழ்ந்த சர்தார் வேதரத்தினம் அவர்கள், "கஸ்தூரிபா கன்னியா குருகுலம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை நிறுவினார். ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வியும் கல்வி முடிந்ததும் வாழ்க்கை நடத்துவதற்கான தொழிலும் அந்தக் குருகுலத்தில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. சர்தார் அவர்களின் மகன் வே. அப்பாக்குட்டி

அவரது வாரிசாக நின்று அதனை நடத்தி வருகிறார். தமிழக அரசு ஆண்டுதோறும் பொருள் உதவிதருகிறது. பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கமும் தேவைப்பட்ட போதெல்லாம் உதவி புரிந்து வருகிறார்.

கன்னியா குருகுலத்தின் மாணவியர் சீருடை அணிந்து மேடையின் எதிரில் அமர்ந்திருந்த காட்சி இன்னமும் என் கண்களைவிட்டு மறையவில்லை. கூட்டத்தில் பேசுவார்கள் என ஆறு எம். பி. க்களின் பெயர்களும் இருபது எம். எல். ஏ. க்களின் பெயர்களும் அழைப்பிதழில் பொறிக்கப்பட்டிருந் தன. அழைப்பைக் கண்டு நான் அஞ்சினேன். வேதாரணியத் தில் பொது கூட்டத்தை முடித்துக் கொண்டு தஞ்சை சென்று ரயிலேற சொற்ப நேரமே இருந்தது. அந்த குறைந்த நேரத் திலே ஆறு எம்.பி.க்களும், இருபது எம். எல். ஏ.க்களும் நானும் பேசி முடிக்கவேண்டுமே யென்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

''எப்படியும் ரெயிலைப் பிடித்துவிட நான் ஏற்பாடு செய் கிறேன். நீங்கள் அஞ்ச வேண்டாம். நீண்ட நேரம் பேசுங் கள், வேதாரணிய மக்கள் விரும்புகிறார்கள்'' என்று கலெக்டர் திரு. ராமு என்னிடம் சொன்னார்.

வியப்பென்ன வென்றால், ஆறு எம். பிக்களில் ஒருவர் கூட கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இருபது எம்.எல். ஏக்களில் இருவர் மட்டுமே கலந்து கொண்டு பேசினர். 18 பேர் கலந்துகொள்ளவில்லை. இவர்களில் மூவர் முன்னாள் அமைச்சர்களாவர். இது, எனக்கு வியப்பையும் வேதனை யையும் தந்தது. கலந்து கொண்ட எம். எல். ஏக்கள் இரு வரில் ஒருவர் மார்க்சிஸ்டு என்று அறிந்தேன். மற்றொரு வர் ஆளும் கட்சியான அ. தி. மு. க.

எம், பி.க்களில் நால்வரும் எம். எல். ஏக்களில் ஐவரும் இந்திரா காங்கிரசார். இவர்களில் ஒருவர்கூட விழா நடந்த

பக்கமே தலைகாட்டவில்லை. அவ்வளவு பேரும் தஞ்சை மாவட்ட வாசிகளே! சுதந்திரப் போராட்ட வரலாறு இ. காங்கிரசின் சொத்தாகி விட்டது. ஆனால், அதற்கு காங்கிரசாரே மதிப்பு தராத நிலை கண்டு என் மனம் வேதனை யடைந்தது. சுதந்திரத்தின் பலனை அனுபவிப்ப திலே அரசியல் கட்சிகள் போட்டி யிடுகின்றன. ஆனால், அதனைப் போற்றுவதிலே போட்டியிடக் காணோம்.

அனைத்துக் கட்சி விழாவாக மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்திருந்தும், ஆளும்கட்சியினர் விழாவாகவே நடந்தது. நாடு சுதந்திரம் பெறுவதற்குப் பாடுபட்டவர்களில் ஒருவன் என்ற முறையிலே எம். பி க்களின்,—எம்.எல்.ஏ.க் களின் போக்கு குறித்து நான் வேதனையடைந்தேன்.

அரசு விழாக்களிலே ஸ்தல எம். எல். ஏ.க்கள் அழைக்கப் படவில்லையென்றால், சட்ட மன்றத்திலே கண்டனக் குரல் எழுகின்றது. அழைத்தாலோ அவர்கள் வருவதில்லை. பெயர்களை விளம்பரப்படுத்துவதுதான் மிச்சம். இந்த அனுப வத்தை அரசு விழா மேடைகள் பலவற்றில் யான் பெற்றிருக் கிறேன்.

கூட்டத்திற்கு தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு. மா. இராமு தலைமை வகித்தார். தமிழக அரசின் தலைமைக் கொறடா துரை கோவிந்தராசன் எம். எல். ஏ, சிறுசேமிப்பு துணைத் தலைவர் மாண்புமிகு கோ வி. நாராயணசாமி, வேதாரணியம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சிவ. கனக சுந்தரம், வேதாரணிய பேரூராட்சித் தலைவர் திரு. ஜி. சங்கர வடிவேலு, திரு. எம். செல்லமுத்து எம். எல். ஏ. ஆகி யோர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். திரு. வே. அப்பாக்குட்டி அவர்களும் பேசினார். இறுதியில் நான் சுமார் அரை மணி நேரம் பேசினேன்.

வேதாரணிய மண்ணுக்குப் புனிதம் ஏற்பட்டது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உப்பளத்தில் ராஜாஜி சட்டத்தை

அவரது வாரிசாக நின்று அதனை நடத்தி வருகிறார். தமிழக அரசு ஆண்டுதோறும் பொருள் உதவிதருகிறது. பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கமும் தேவைப்பட்ட போதெல்லாம் உதவி புரிந்து வருகிறார்.

கன்னியா குருகுலத்தின் மாணவியர் சீருடை அணிந்து மேடையின் எதிரில் அமர்ந்திருந்த காட்சி இன்னமும் என் கண்களைவிட்டு மறையவில்லை. கூட்டத்தில் பேசுவார்கள் என ஆறு எம். பி. க்களின் பெயர்களும் இருபது எம். எல். ஏ. க்களின் பெயர்களும் அழைப்பிதழில் பொறிக்கப்பட்டிருந் தன. அழைப்பைக் கண்டு நான் அஞ்சினேன். வேதாரணியத் தில் பொது கூட்டத்தை முடித்துக் கொண்டு தஞ்சை சென்று ரயிலேற சொற்ப நேரமே இருந்தது. அந்த குறைந்த நேரத் திலே ஆறு எம்.பி.க்களும், இருபது எம். எல். ஏ.க்களும் நானும் பேசி முடிக்கவேண்டுமே யென்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

''எப்படியும் ரெயிலைப் பிடித்துவிட நான் ஏற்பாடு செய் கிறேன். நீங்கள் அஞ்ச வேண்டாம். நீண்ட நேரம் பேசுங் கள், வேதாரணிய மக்கள் விரும்புகிறார்கள்'' என்று கலெக்டர் திரு. ராமு என்னிடம் சொன்னார்.

வியப்பென்ன வென்றால், ஆறு எம். பிக்களில் ஒருவர் கூட கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இருபது எம்.எல். ஏக்களில் இருவர் மட்டுமே கலந்து கொண்டு பேசினர். 18 பேர் கலந்துகொள்ளவில்லை. இவர்களில் மூவர் முன்னாள் அமைச்சர்களாவர். இது, எனக்கு வியப்பையும் வேதனை யையும் தந்தது. கலந்து கொண்ட எம், எல். ஏக்கள் இரு வரில் ஒருவர் மார்க்சிஸ்டு என்று அறிந்தேன். மற்றொரு வர் ஆளும் கட்சியான அ. தி. மு. க.

எப், பி.க்களில் நால்வரும் எம். எல். ஏக்களில் ஐவரும் இந்திரா காங்கிரசார். இவர்களில் ஒருவர்கூட விழா நடந்த

பக்கமே தலைகாட்டவில்லை. அவ்வளவு பேரும் தஞ்சை மாவட்ட வாசிகளே! சுதந்திரப் போராட்ட வரலாறு இ. காங்கிரசின் சொத்தாகி விட்டது. ஆனால், அதற்கு காங்கிரசாரே மதிப்பு தராத நிலை கண்டு என் மனம் வேதனை யடைந்தது. சுதந்திரத்தின் பலனை அனுபவிப்ப திலே அரசியல் கட்சிகள் போட்டி யிடுகின்றன. ஆனால், அதனைப் போற்றுவதிலே போட்டியிடக் காணோம்.

அனைத்துக் கட்சி விழாவாக மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்திருந்தும், ஆளும்கட்சியினர் விழாவாகவே நடந்தது. நாடு சுதந்திரம் பெறுவதற்குப் பாடுபட்டவர்களில் ஒருவன் என்ற முறையிலே எம். பி க்களின்,—எம்.எல்.ஏ.க் களின் போக்கு குறித்து நான் வேதனையடைந்தேன்.

அரசு விழாக்களிலே ஸ்தல எம். எல். ஏ.க்கள் அழைக்கப் படல்விலையென்றால், சட்ட மன்றத்திலே கண்டனக் குரல் எழுகின்றது. அழைத்தாலோ அவர்கள் வருவதில்லை. பெயர்களை விளம்பரப்படுத்துவதுதான் மிச்சம். இந்த அனுப வத்தை அரசு விழா மேடைகள் பலவற்றில் யான் பெற்றிருக் கிறேன்.

கூட்டத்திற்கு தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு. மா. இராமு தலைமை வகித்தார். தமிழக அரசின் தலைமைக் கொறடா துரை கோவிந்தராசன் எம். எல். ஏ, சிறுசேமிப்பு துணைத் தலைவர் மாண்புமிகு கோ வி. நாராயணசாமி, வேதாரணியம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சிவ. கனக சுந்தரம், வேதாரணிய பேரூராட்சித் தலைவர் திரு. ஜி. சங்கர வடிவேலு, திரு. எம். செல்லமுத்து எம். எல். ஏ. ஆகி யோர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். திரு. வே. அப்பாக்குட்டி அவர்களும் பேசினார். இறுதியில் நான் சுமார் அரை மணி நேரம் பேசினேன்.

வேதாரணிய மண்ணுக்குப் புனிதம் ஏற்பட்டது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உப்பளத்தில் ராஜாஜி சட்டத்தை

மீறி உப்பு எடுத்ததாலும்தான். ஆனால், அத்துடன் வேறு சில நிகழ்ச்சிகளும் சேர்ந்துதான் வேதாரணிய மண்ணுக்கு அரசியல் ரீதியில் புனிதத் தன்மை அளித்தது.

உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது ராஜாஜி கைதான பின்னர் முகாமிலிருந்த தொண்டர்களிடம் போலீசார் மிருகத் தனமாக நடந்து கொண்டனர். கடுமையாக அடித்து சிலரை அங்கவீனப்படுத்தினர். அஞ்சா நெஞ்சமுடன் வேதாரணியம் சத்தியாக்கிரக முகாமில் சேர்ந்து தங்கியிருந்தவர்களிலே சிலர், போலீசார் இழைத்த கொடுமையால் அச்சமுற்றவர் களாகித் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டனர். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணியான திருமதி ருக்மணி லட்சுமிபதியின் இருகால்களையும் பிடித்துத் தரையில் நெடுந்தூரம் இழுத்துச் சென்றனராம் போலீசார். இத்துணைக் கொடுமைகளுக்கும் காரணமாயிருந்தவர் ஆங்கிலேயரான கலெக்டர் தார்ன் துரையாவார்.

வேதாரணியம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களில் சிலர், சுதந்திர இந்தியாவிலே பெருமைக்குரிய பதவிகளை அடைந்தனர். திருமதி ருக்மணி லட்சுமிபதி, டாக்டர் டி. எஸ். எஸ். ராசன் ஆகியோர் பழைய சென்னை மாகாணத் தில் அமைச்சர்களாயினர். திரு. ஜி. இராமச்சந்திரன் கேரள ஆட்சியில் அமைச்சரானார். திரு. கே. சந்தானம் மத்தியஅரசில் துணையமைச்சராகவும், பெப்சு மாநிலத்தின் துணை ஆளுநராகவும், இந்தியா முழுவதற்குமான நிதிக் கமிஷனின் தலைவராகவும் பதவிகள் வகித்து நவபாரதத் தைப் படைக்கும் பணியில் பங்கு கொண்டார்.

திரு. என். அண்ணாமலைப் பிள்ளை, மதுரை ஏ. வைத்ய நாதய்யர், வேலூர் திரு. அ. குப்புசாமி முதலியார் ஆகியோர் உட்பட பலர் சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் அங்கம் வகித்தனர். திரு. வ. ரா., திரு. ஏ. என். சிவராமன்

ஆகிய இருவரும் எழுத்தாளர் உலகில் சரித்திர நாயகர்களாகும் பேற்றினைப் பெற்றனர். இதற்கெல்லாம் மூதறிஞர் ராஜாஜிதான் காரணமானார் என்பதனை நாட்டு மக்கள் நினைவில் கொள்ளவேண்டும். தலைவர்களைத் தயாரிப்பதிலே அவருக்கு தனித்திறமை இருந்தது. தமிழ்நாட்டின் தலைவர் பரம்பரை தன்னோடு முடிந்து போகவேண்டுமென்று அவர் நினைத்ததில்லை.

வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்திய ராஜாஜி அவர்களும் சென்னை மாகாணத்தில் இருமுறை முதலமைச்சர் பதவி வகித்தார். மத்திய அமைச்சரவையிலே இருவேறு சந்தர்ப்பங்களில் அமைச்சர் பொறுப்பை ஏற்று பல்வேறு துறைகளை நிர்வகித்தார். மேற்கு வங்கத்திலே ஆளுநர் பதவி வகித்தார். ஆம்; அவர்தான் முதல் இந்திய ஆளுநர்!

இத்தனைக்கும் மேலாக, இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவியையும் அவர் வகித்தார் என்பதை நான் இங்கு நினைப்பூட்டத் தேவையில்லை. சுதந்திர இந்தயாவிலே இந்தியர் ஒருவர் கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றார் என்றால் அவர் ராஜாஜிதான்!

1950 சனவரி 26ஆம் நாளிலே இந்திய அரசியல் நிர்ணய மன்றம் தயாரித்த அரசியலமைப்பில் கையொப்பமிட்டு, அதை நடைமுறைக்கு விட்ட பெருமையும் கடைசி கவர்னர் ஜெனரலான ராஜாஜிக்குத்தான் உண்டு. இந்திய விடுதலைப் போரைத் தொடங்கி வைத்த வீரபாண்டியக் கட்டபொம்மன் தமிழ் நாட்டின் குறுநில மன்னர்களில் ஒருவராவார். இந்தியாவிலிருந்து வெள்ளையரை வெளியேற்றும் இறுதிச் சடங்கை நடத்திவைத்த பெருமையும் ஒரு தமிழருக்குத்தான் கிடைத்தது. அவர் ராஜாஜியாவார். இத்தனை பெருமைகளுக்கும் பின்பலமாக அமைந்தது வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகம். புனித மண் எடுக்க தமிழக அரசு ஐந்து தலங்களைத்

தேர்ந்தெடுத்த தென்றாலும், அவற்றுள் தலையாயது வேதாரணியம்தான்.

வேதாரணியம் பொதுக்கூட்டத்திலே அரைமணி நேரம் நான் பேசினேன் என்றாலும், என் கவனம் தஞ்சை ரெயில் நிலையத்தையே நாடிநின்றது. பேச்சை முடித்ததும் மாவட்ட ஆட்சியாளர் திரு ராமு அவர்களுடன் சேர்ந்து தஞ்சைக்குப் புறப்பட்டேன். வேதாரணியம் நிகழ்ச்சி என்னுடைய வரலாற்றில் ஒரு புதிய ஏட்டைச் சேர்த்துவைத்தது எனலாம்.

வேதாரணியம் பொதுக் கூட்ட மேடையில் முப்பெரும் தியாகிகளுக்குச் சிறப்புச் செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. நான், காலையில் வேதாரணியம் சென்றதும், ''1930ல் ராஜாஜி தலைமையில் நடந்த உப்புச் சத்தியா கிரகத்தில் கலந்து தண்டனை பெற்ற உள்ளூர் வாசிகளிலே யாரேனும் இப்போது உயிருடனிருக்கிறார்களா?'' என்று மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டேன். ''இருந்தால் அவர்களை அழைத்து கௌரவிப்போம்'' என்றேன்.

அவரும் திரு. அப்பாக்குட்டியும் மூன்று பேரைத் தேடிப் பிடித்து மாலையில் பொதுக்கூட்ட மேடைக்குக்கொண்டு வந்து விட்டனர். அவர்கள் பெயர்களும் உப்புப் போர் சம்பந்தப்பட்ட குறிப்புகளும் வருமாறு:

தியாகி வயிரப்பன்: இவருக்கு இப்போது வயது 75. உப்புப் போராட்டக் காலத்திலே சவரத் தொழில் செய்து வந்தார். அரசாங்க அலுவலர்களுக்கு முடிவெட்டவோ சவரம் செய்யவோ கூடாது என்பது கிராமக் கட்டுப்பாடு. சாதாரண உடையிலிருந்த ஒரு சிப்பாய்க்கு இனந் தெரியாத தால் சவரஞ் செய்தார். ஒரு பக்கம் சவரஞ் செய்து முடித்தபின் இனந்தெரிந்து, அதற்குமேல் செய்ய மறுத்து விட்டார். அதிகாரிகள் துன்புறுத்தியும் கட்டாயப்படுத்தியும்

அவர்அஞ்சவில்லை.ஆகவே. இ. பி. கோ. 145-ஆவது பிரிவுப் படி வழக்கு தொடரபட்டு 6 மாத சிறைத்தண்டனை பெற்றார். கடலூர் சிறையில் தண்டனையை அனுபவித்தார்.

திரு. வீரபத்திரப் பிள்ளை: வேதாரணியம் வாசியான இவர் ராஜாஜியின் படைவீரர்களில் ஒருவராக இருந்து சட்டத்தை மீறி உப்பெடுத்தார். இவர் மைனர் பருவத்திலிருந்தாராத லால், 15 நாள் காவலிலிருந்ததோடு விடப்பட்டார்.

திரு. தியாகராயத்தேவர்: கிராமகர்ணம் பதவியிலிருந்து கொண்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதால், பதவியி லிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டார்.

இந்த மூவரையும் ஒருவர் பின் ஒருவராக மக்களுக்கு அறிமுகப்படுத்தி, க்தர் புத்தாடைகள் அணிவித்துச் சிறப்பித் தேன். 57 ஆண்டுகளுக்குப்பின் மூவரேனும் வாழ்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதுதானே! மரியாதை பெற்றதிலே அந்த மூவருக்கும் மகிழ்ச்சிதான்!

வேதாரணியம் கூட்டத்திலே, அங்கு நடந்த உப்புச் சத்தியாகிரகத்தின் போது போலீசார் சத்தியாகிரகிகளுக் கிழைத்த கொடுமைகளை யான் அடுக்கடுக்காக எடுத் துரைத்தபோது மக்கள் மெய்மறந்து கேட்டனர். ஆம், நாடு சுதந்திரம் பெற நடந்த போராட்ட வரலாற்றையே மறக்கும்படிச் செய்துவிட்டோமல்லவா! சாதிப் போராட்டமும் மத வழிப் போரட்டமும் மலிந்து விட்ட இக் காலத்திலே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சுதந்திரப் போராட்டங் களை மக்கள் நினைக்க சந்தர்ப்பமேது?

சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே தன் தனக்குரிய பங்கை இந்திய மாநிலங்களிலே—அந்தந்த-மாநில அரசு களிலே—ஒவ்வொன்றும் நூலாக்கி விட்டன. தமிழ் மாநிலத்

திலே தொடர்ந்து இருபதாண்டு காலம் சுதந்திரத்தை தேடித் தந்த காங்கிரசே ஆட்சி நடத்தியும், சுதந்திரப் போரில் தமிழ கத்தின் பங்கு நூல் வடிவப் பெற்று மக்கள் கைக்கு வர வில்லை.

சுதந்திரப் போரைத் தொடங்கி வைத்த கட்டபொம்மனை கொள்ளைக்காரனாக வருணிக்கும் நூல்கள் வெளிவந்து விட்டன. சுதேசிக் கப்பலோட்டி நாற்பதாண்டு கால நாடு கடத்தல் தண்டனை பெற்ற சிதம்பரனாரை ஜஸ்டிஸ் கட்சி யாரோடு சேர்த்து பேசியவர்களும் எழுதியவர்களுமுண்டு.

இந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்க தமிழரசுக் கழகம் ஒன்றுதான் பாடுபட்டு வருகிறது. அதன் தலைவன் என்ற முறையிலேதான் வேதாரணியம் மேடையிலே சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளையும் சுதந்திரம், பெற்ற பின் மாநில -மத்திய அரசுகள் புரிந்துள்ள சாதனைகளையும் விளக்கிப் பேசினேன். எனது பேச்சு வேதாரணிய மக்களுக்கு செவி விருந்தாக மட்டுமின்றி, புதுவிருந்தாகவும் இருந்திருக்கும் என்றார் மாவட்ட ஆட்சியாளர். அவர் நடுத்தர வயதினரா தலால் அவருக்கும் புதுவிருந்தாகத்தானிருந்திருக்கும்!

வேதாரணியத்திலிருந்து தஞ்சைக்கு வரும் வழியிலே பட்டுக்கோட்டையிலுள்ள பயணிகள் பங்களாவிலே சிறிது நேரம் தங்கினேன்! பட்டுக்கோட்டையில் பிறந்த திரு. ஆர். வேங்கடராமன்தானே இன்று பாரதப் பெருநாட்டின் ஜனாதிபதி! அதனால், பட்டுக்கோட்டைக்குப் பெருமை ஏற்பட்டு விட்டது.

அங்கு பயணிகள் பங்களாவில் காங்கிரஸ்காரர்களும் அரசியல் பிரமுகர்களும் என்னைச் சந்திக்க ஏற்பாடு செய் திருப்பதாகச் சொல்லி, அங்கு என்னை காரிலிருந்து இறக் கினார் மாவட்ட ஆட்சியாளர். ஆனால், அவர் சொன்னபடி

காங்கிரஸ் பிரமுகர்களை நான் பார்க்கவில்லை. தாலுக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கு வரவேற்றனர்.

பட்டுக்கோட்டையிலிருந்து தஞ்சைக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். அங்கு அரசின் சுற்றுலா விடுதியில் காவல்துறை அதிகாரிகளும், திரு. நாராயணசாமி உள்ளிட்ட தமிழரசுக் கழகத் தோழர்களும், எனக்கு அறிமுகமில்லாத காங்கிரஸ் தோழர்கள் சிலரும் என்னையும் புனித மண் தாங்கிய கலசத்தையும் வரவேற்றனர்.

சுற்றுலா விடுதியிலிருந்து ரெயில்வே நிலையம் வரை புனித மண் கலசத்தை ஊர்வலம் விட மாவட்ட ஆட்சியாளர் திரு. ராமு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார். கலசத்தைக் கையிலேந்திய வண்ணம் நான் சென்ற ஜீப்வண்டி மலர்களால் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. வண்டியின் எதிரே இருபுறத்திலும் சிறப்புடையணிந்த காவலர்கள் கையில் துப்பாக்கிகளுடன் அணிவகுத்து நடைபோட்டனர். கதராடை யணிந்த தொண்டர் படையினரும் வீறு நடை போட்டுச் சென்றனர். பாண்டு வாத்தியக்காரர்கள் வழி நெடுக மக்களைக் கவரும் வகையில் வாத்தியங்களை முழக்கினர்.

சுற்றுலா மாளிகையிலிருந்து ரெயில் நிலையம் வரை இருபுறமும் மின் விளக்குக் குழாய்களும் சிறுசிறு பல்புகளா லான தோரணங்களும் வழிநெடுகக் காட்சியளித்தன. இப்படி, ஒளியைக் கண்டும் ஒலியைக்கேட்டும் மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு ரெயில் நிலையத்தை யடைந்தேன்.

அங்கு பிளாட்பாரத்தில் பெருங்கூட்டம்! உயர்தர அதிகாரிகள் உள்பட காவலர்கள் ரெயில் நிலையத்தின் நுழைவாயிலிலே அணி வகுத்து நின்று மரியாதை செய்து புனித மண்கலசத்தை வரவேற்றனர். நிலையத்திற்குள்ளே பிளாட்பாரத்தில் நடமாடவும் இடமின்றி நெருக்கி அடித்துக்

கொண்டு புனித மண் கலசத்தை வழியனுப்ப தஞ்சை நகர மக்கள் திரண்டிருந்தனர்.

வேதாரணியத்தில் பார்க்க வாய்ப்பற்றுவிட்ட திரு. சிங்காரவடிவேலு எம். பி. (காங்) அவர்களை இங்குதான் பார்க்க முடிந்தது. அவர் நாடாளுமன்றத்திற்கு தஞ்சை நகரத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரும் சென்னைக்கு வர தஞ்சையில் ரெயிலேறினார். ஆம்; சென்னையிலிருந்து ரெயிலில் பயணஞ் செய்து டில்லி சென்று ஆகஸ்டு 13 ஆம் தேதி நடக்கவிருந்த நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக! ரெயில் நிலையத்தில் தற்செயலாக என்னைக் கண்டதும் மகிழ்ச்சியோடு அன்புரைகூறி அளவளாவினார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் அகத்தியலிங்கமும், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வீராசாமியும் மற்றும் ஏராளமான மாணவர்களும் திரண்டிருந்தனர்.

புனிதமண் கலசம் பயணம் செய்யவிருந்த ரெயில் பெட்டியானது பலவண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மலராலேயே செய்த பெட்டியோ என்று மலைக்கக் கூடிய அளவுக்கு பெட்டியின் புறத்தோற்றம் மலர்களால் முற்றிலும் மறைக்கப் பட்டிருந்தது.

நேரத்தோடு என்னுடன் புனிதமண் கலசம் ரெயில் நிலையத்திற்கு வந்துவிட்டதால், சரியான நேரத்தில் ரெயில் புறப்பட்டு விட்டது! அகத்தியான்பள்ளி, வேதாரணியம், பட்டுக்கோட்டை, தஞ்சை ஆகிய இடங்களிலே ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்ததற்காக மாவட்ட ஆட்சியாளருடன் நான் கைகுலுக்கிப் பாராட்டு தெரிவித்ததுமே ரெயில் புறப்பட்டு விட்டது.

குழுமியிருந்த மக்கள் அவ்வளவு பேரும் மகிழ்ச்சிப் பெருக்கால் வாழ்த்தொலியெழுப்பி ஆரவாரம் செய்து, என்னையும் புனிதமண் கலசத்தையும் வழியனுப்பி வைத்தனர். பொது மக்களைப் பொறுத்த வரையில் அவ்வளவு பேரும் தேச பக்தர்கள்தான்!

புனித மண் எடுப்பு சம்பந்தப்பட்ட தஞ்சை மாவட்ட நிகழ்ச்சிகளனைத்தையும் சென்னை தொலைக் காட்சி நிறுவனத்தாரும் திருச்சி வானொலி நிலையத்தாரும் பதிவு செய்துவந்தனரென்பதை நன்றியுணர்வோடு இங்கு நான் குறிப்பிடவேண்டும்.

மறுநாள் (செப்டம்பர் 8) காலை 'இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்' சென்னை எழும்பூர் நிலையத்தை அடைந்தபோது என்னை வியப்பிலாழ்த்தும் வகையில் காங்கிரஸ்காரர்கள், சர்வோதய இயக்கத் தோழர்கள் கதரணிந்த தமிழரசுக் கழகத் தோழர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், அரசு செய்தித் துறைச் செயலர்—துணை இயக்குநர் உள்பட ஏராளமானவர் குழுமியிருந்து புனித மண் கலசத்தை வாழ்த்தொலி யெழுப்பி வரவேற்றனர். வழக்கத்திற்கு மாறாக 'வந்தே மாதரம்' என்ற பண்டைக் கால மந்திர ஒலியும் என் காதில் விழுந்தது.

ரெயில்வே நிலையத்தின் பிளாட்பாரத்தில் சிறப்புடையணிந்த காவலர்கள் துப்பாகிகளைக் கைகளிலேந்தி அணிவகுத்து மரியாதை செய்து கலசத்தை வரவேற்றனர். அரசு செய்தித் துறையினர் இதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

ரெயில் நிலையத்திலிருந்து கலசத்துடன் எனது மோட்டாரில் முன்னேயும் பின்னேயும் ஆயுத போலீஸ் மரியாதையுடன் கலசத்தை எடுத்துக் கொண்டு ராஜாஜி மண்டபத்திற்குள் நுழைந்தேன்.

வே—3

வடக்குத் திசையிலிருந்து மண்டபத்திற்குள் செல்ல படிகள் பலவற்றைக் கடந்து மேலேற வேண்டும். இந்தப் படிகளைக் கடந்து மண்டபத்திற்குள் செல்ல நேர்ந்த போதெல்லாம் நான் பெரிதும் சிரமப்படுவதுண்டு. இப்போது மண் கலசத்தை என் இரு கைகளிலும் ஏந்திக் கொண்டு படி ஏறவேண்டும். எனது அறுபதாண்டு பொது வாழ்விலே படிப்படியாகக் கால்வைத்து ஏறித்தான் மேல் நிலையை அடைந்தேன். ஆயினும் இப்போது வயது 82 ஆகிறதல்லவா!

நான் எதிலும் கொஞ்சம் வைதிகன்—அதாவது, பழமையில் பற்றுடையவன். கையிலிருப்பது புனித மண் கலசமாதலால், அதனை பிறரிடம் கொடுத்துவிட்டு வெறுங் கையுடன் படியேறுவது புனித மண்கலசத்திற்குச் சிறுமை செய்வதாகுமென்று கருதினேன்.

ஆகஸ்டு 6, 7 ஆகிய இரண்டு நாட்களிலே இரண்டு இரவுகளில் சரியாகத் தூக்கமில்லை. இந்த இரவுகளுக்கு இடையிலிருந்த ஒரு பகல் முழுவதும் சரியாக 50 மைல்கள் காரில் பயணம் செய்து இளைத்தும் களைத்தும் போய்விட்டேன். முன்பே சொன்னது போல நம் தமிழ் நாட்டு அரசியலில் எவ்வளவு வளைவுகளும் மேடுபள்ளங்களுமுண்டோ அவ்வளவு வளைவுகளும் மேடுபள்ளங்களும் தஞ்சைமாவட்ட சாலைகளிலுமுண்டு. அவ்வளவையும் கடந்து சென்னைக்கு வந்து விட்டோம் என்று மகிழ்ந்திருந்த நேரத்திலே செய்தித் துறை, காவல்துறை அதிகாரிகள் என் கைகளிலுள்ள கலசத்தோடு ராஜாஜி மண்டபத்தின் படிகளை ஏறத் தூண்டினார்கள்.

தளர் நடை போட்டு படிகளைக் கடந்து, மண்டபத்துக்குள் சென்றேன். அந்தக் காட்சியை சென்னை தொலைக் காட்சியில் நான் கண்டபோது, என்மீது எனக்கே பரிதாப

உணர்ச்சி ஏற்பட்டது. என் அருகிலிருந்து அதைப் பார்த்த என் மனைவி இராசேசுவரி என்மீது ரொம்ப அனுதாபப்பட்டாள். அந்தக் காட்சியைக் கண்ட நண்பர்களும் என்னை நேரில்பார்த்தபோது, ''சென்னையில் புனிதமண் எடுத்திருக்கக்கூடாதா? ஏன், வேதாரணியம் சென்றீர்கள்?'' என்று மிக்க அனுதாபத்துடன் கேட்டார்கள்!

வருணனையை விட்டு விஷயத்திற்கு வருவோம். ராஜாஜி மண்டபத்திற்குள் சென்றதும் அங்கு மேடைமீது, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., திருப்பூர் குமரன், மணியாச்சி மாவீரன் வாஞ்சி நாதன் ஆகியோர் என் அகக் கண்களுக்குக் காட்சியளித்தனர். ஆம்; அவர்கள் சம்பத்தப்பட்ட புனித இடங்களில் எடுக்கப்பட்ட கலசங்கள் மேடையில் காட்சி யளித்தன. யான் கொண்டு வந்த கலசத்திற்கென இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் கலசத்தை வைத்து விட்டு, ஐந்து கலசங்களையுமே இரு கைகளாலும் தொட்டு வழிபட்டு அஞ்சலி செலுத்தினேன்.

ராஜாஜி மண்டபத்திலே புனித மண் கலசங்களை வைக்க அரசு ஏற்பாடு செய்திருந்தது. சென்னை நகரப் பொதுமக்கள் அவற்றைப் பார்த்து வழிபட்டு அஞ்சலி செலுத்துவதற்காகத்தான்!

இனி, மற்ற நான்கு கலசங்களுக்கு மண் எடுக்கப்பட்ட புனித இடங்களைப்பற்றியும், அங்கெல்லாம் மண் எடுத்த தியாக சீலர்களைப் பற்றியும் விளக்க விரும்புகிறேன்.

# நால்வேறிடங்களில் தியாகிகளெடுத்த புனித மண்

## தூத்துக்குடி

தூத்துக்குடி என்பது தமிழகத்தின் இரண்டாவது துறை முகப் பட்டினமாகும். இது, இலக்கியங்களிலே 'தூற்றுக்குடி' என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு, தமிழிலுள்ள புராணங் களிலே ''திருமந்திர நகர்'' என்றும் பெயருண்டு. கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் தமது சுய சரித நூலிலே, ''அருமந்திரத்தை அம்மைக் கருளிய திரு மந்திர நகர்'' என்று, பக்திப் பெருமிதத்தோடு குறிப்பிடு கிறார்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இலங்கையின் தலை யிடமான கொழும்பு நகருக்குக் கப்பல் போக்குவரத்து நடந்து வருகிறது. இது, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வெள்ளைய ராலேயே நடத்தப்பட்டு வந்த ''பிரிட்டிஷ் ஸ்டீம் நாவி கேஷன் கம்பெனி''க்கு உரிமையாக இருந்து வந்தது. வழக் கறிஞர் வ. உ. சிதம்பரனார், தூத்துக்குடிக்கும் கொழும்புக்கு மான கப்பல் போக்குவரத்தை இந்திய மயமாக்க விரும்பி, 1906-ல் ''சுதேசிக் கப்பல் கம்பெனி''யை நிறுவினார். பிரிட்டிஷ் கம்பெனிக்கும் சுதேசிக் கம்பெனிக்கும் ஏற்பட்ட போட்டியானது இயற்கையாகவே இந்திய விடுதலை போராட்டத்தின் ஓர் அங்கமாகி விட்டது.

சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளரான சிதம்பர னார் ஹார்வி மில் தொழிலாளருக்கெனத் தனியாக சங்கம் நிறுவி, அதன் சார்பில் ஊதிய உயர்வு கோரி, வேலை நிறுத்தத்தில் தொழிலாளரை ஈடுபடுத்தினார்.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி நிர்வாகிகளாகவும், ஹார்வி மில் அதிபர்களாகவும் இருந்த ஆங்கிலேயருக் கெதிராகச் செயல்பட்டு வந்த நேரத்திலேயே, அனைத்திந்திய தேசிய காங்கிரசின் சார்பில் தூத்துக்குடி நகரைத் தன்னுட் கொண்ட நெல்லை மாவட்டம் முழுவதிலும் தேச விடுதலைக் கிளர்ச்சியைத் தோற்றுவித்தார் சிதம்பரனார். சுப்பிரமணிய சிவா என்னும் சந்நியாசியும், வ. உ. சி. யின் தோழராகி அவருடைய அரசியல் பணிகளிலே பங்கு கொண்டார்.

சிதம்பரனாரும் சிவாவும் 1908-ல் கைது செய்யப்பட்ட னர். இராச நிந்தனையாகப் பேசியதாக அவ்விருவர் மீதும் வழக்கு தொடரப்பட்டது. செஷன்ஸ் நீதிபதிபின்ஹே சுதேசிக் கப்பல் ஓட்டிய சிதம்பரனாருக்கு இரண்டு ஆயுள் (நாற்பது ஆண்டு)நாடுகடத்தல் தண்டனையும்,சிவாவுக்குப் பத்தாண்டு நாடு கடத்தல் தண்டனையும் விதித்தார்.

இவ்வளவுக்கும் காரணமான தூத்துக்குடி நகரை ''தென்னகத்தின் பாரிசால்'' என வருணித்துத் தமது 'வந்தே மாதரம்' பத்திரிகையில் அரவிந்தர் எழுதினார்.

இப்படி, தேசபக்தர்கள் நிகழ்த்திய வீரதீரச் செயல்களுக் கும், ஆட்சியாளர் நடத்திய அடக்குமுறைக் கொடுமைகளுக் கும் இடமாக இருந்த காரணத்தால், தூத்துக்குடித் துறை முகம் உள்ள பிரதேசத்தைப் புனித இடமாகக் கருதி, அவ் விடத்திலே மண் எடுத்து வர நெல்லை எஸ். என். சோமயாசுலு அவர்களை டாக்டர் எம். ஜி. ஆர். அரசு தேர்ந்தெடுத்தது.

திரு. எஸ். என். சோமாயசுலு. 1923 தொடங்கி 1942 வரையுள்ள கால கட்டத்திலே விடுதலைப் போரில் ஈடுபட்டுப் பலமுறை சிறை புகுந்த தியாகியாவார்.

திரு. சோமயாசுலு அவர்கள், 7-8-87 அன்று தூத்துக்குடி துறைமுகப் பகுதியிலே பெருங் கூட்டத்தினர் திரண்டிருந்த சூழ்நிலையில், 'வந்தே மாதரம்' என்னும் மந்திரம் முழங்க, புனித மண் எடுத்து அரசு தந்த ஐம்பொன் குடத்தில் நிறைத்து, சென்னைக்குக் கொண்டு வந்து ராஜாஜி மண்டபத்தில் வைத்தார்.

அன்பர் சோமயாசுலு, வ. உ. சி யின் தோழராவார். பாரதியிடமும் பக்தியுடைவலர், சிறந்த பேரறிஞர். பல முறை சிறை சென்ற தியாகி. சட்டப் பேரவையில் ஒரு முறை உறுப்பினராக இருந்தவர். 'இளந்தமிழன்' என்ற வாரப் பத்திரிகையை நடத்தியவர்.

மணியாச்சி

மணியாச்சி ரயில்வே நிலையத்தில் எல். கிருஷ்ணசாமி பாரதி பி ஏ. பி. எல்., புனித மண் எடுக்க தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 7-8-87 அன்று, இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கும் விடுதலை வீரர்களிலே சிலரும், மாவட்ட உயர் அதிகாரிகளும், பிரமுகர்களும் தம்மைச் சூழ்ந்திருந்த நிலையிலே 'வந்தே மாதரம்' என்னும் மாமந்திர முழக்கத்தைக் கேட்டு புனித மண் எடுத்து, அரசு தந்த ஐம்பொன் கலசத்திலே போட்டு, இரவே ரயிலேறி, மறுநாள் காலை சென்னை ராஜாஜி மண்டபத்திலே கலசத்தை வைத்தார்.

மணியாச்சி ரயில் நிலையத்திற்கு புனிதத் தன்மை தேடிய பெருமை திரு. வாஞ்சிநாதன் என்னும் தமிழ் இளைஞ

னுடையதாகும். சிதம்பரனார் இரண்டு ஆயுள் தண்டனை பெறவும், நெல்லையிலே கலகம் தோன்றிய போது, துப்பாக்கிச் சூட்டிலே பலர் உயிரிழக்கவும் காரணமாக இருந் தவர் ஆஷ் என்னும் துரைமகனார். அதற்காக அவரைப் பழி வாங்க வாஞ்சிநாதன் திட்டமிட்டார்.

கலெக்டர் ஆஷ் துரைமகன் தனது இளம் மனைவியோடு கோடைக்கானலுக்கு ரெயிலில் சென்று கொண்டிருந்தார். வழியில் மணியாச்சி நிலையத்தில் அந்த ரயில் நின்ற தருணத் திலே, ஆஷ் தம்பதிகள் இருந்த பெட்டிக்குள்ளே புகுந்து, தனது கைத் துப்பாக்கியால் சுட்டு, ஆஷ் துரையைக் கொன்று விட்டான் இளைஞர் வாஞ்சிநாதன்.

ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற பின், மணியாச்சி ரயில் நிலையத்திலிருந்த கழிப்பறைக்குள் புகுந்து, வாய்க்குள் தன் கைத்துப்பாக்கியைத் திணித்து, தானே தன்னைச் சுட்டுக் கொண்டு தற்கொலை புரிந்து கொண்டார். வாஞ்சியி னுடைய தன்னலமற்ற உயிர்த்தியாகத்தால் மணியாச்சி ரயில்நிலையத்தின்மண்புனிதம் பெற்றுவிட்டது.ஆம்;ஆஷைக் கொலைபுரிந்ததைவிட,தனது உயிரையும் மாய்த்துக்கொண்ட வாஞ்சியின் தியாகமும் மணியாச்சி மண்ணுக்கு புனிதம்தந்து விட்டது! அதனால், அங்கிருந்து மண் எடுத்து வர திரு. எல். கிருஷ்ணசாமி பாரதியை அரசு தேர்ந்தெடுத்தது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, விடுதலைப் போரில் பங்கு கொண்டு சிறை சென்றவர். அவருடைய மனைவி லட்சுமி அம்மாளும் சிறை புகுந்தவர். இவர்கள் இருவருமே 1937-ல் தமிழக சட்டப் பேரவைக்கு காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். வழக்கறிஞரான இவர், நாடு விடுதலை பெற்றபோது அமைந்த அரசியல் நிர்ணய மன்றத் தில் காங்கிரஸ் சார்பில் அங்கம் பெற்றவர்.

திரு. எஸ். என். சோமாயசுலு. 1923 தொடங்கி 1942 வரையுள்ள கால கட்டத்திலே விடுதலைப் போரில் ஈடுபட்டுப் பலமுறை சிறை புகுந்த தியாகியாவார்.

திரு. சோமயாசுலு அவர்கள், 7-8-87 அன்று தூத்துக்குடி துறைமுகப் பகுதியிலே பெருங் கூட்டத்தினர் திரண்டிருந்த சூழ்நிலையில், 'வந்தே மாதரம்' என்னும் மந்திரம் முழங்க, புனித மண் எடுத்து அரசு தந்த ஐம்பொன் குடத்தில் நிறைத்து, சென்னைக்குக் கொண்டு வந்து ராஜாஜி மண்டபத்தில் வைத்தார்.

அன்பர் சோமயாசுலு, வ. உ. சி யின் தோழராவார், பாரதியிடமும் பக்தியுடைவலர், சிறந்த பேரறிஞர். பல முறை சிறை சென்ற தியாகி. சட்டப் பேரவையில் ஒரு முறை உறுப்பினராக இருந்தவர். 'இளந்தமிழன்' என்ற வாரப் பத்திரிகையை நடத்தியவர்.

மணியாச்சி

மணியாச்சி ரயில்வே நிலையத்தில் எல். கிருஷ்ணசாமி பாரதி பி ஏ. பி. எல்., புனித மண் எடுக்க தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 7-8-87 அன்று, இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கும் விடுதலை வீரர்களிலே சிலரும், மாவட்ட உயர் அதிகாரிகளும், பிரமுகர்களும் தம்மைச் சூழ்ந்திருந்த நிலையிலே 'வந்தே மாதரம்' என்னும் மாமந்திர முழக்கத்தைக் கேட்டு புனித மண் எடுத்து, அரசு தந்த ஐம்பொன் கலசத்திலே போட்டு, இரவே ரயிலேறி, மறுநாள் காலை சென்னை ராஜாஜி மண்டபத்திலே கலசத்தை வைத்தார்.

மணியாச்சி ரயில் நிலையத்திற்கு புனிதத் தன்மை தேடிய பெருமை திரு. வாஞ்சிநாதன் என்னும் தமிழ் இளைஞ

னுடையதாகும். சிதம்பரனார் இரண்டு ஆயுள் தண்டனை பெறவும், நெல்லையிலே கலகம் தோன்றிய போது, துப்பாக்கிச் சூட்டிலே பலர் உயிரிழக்கவும் காரணமாக இருந் தவர் ஆஷ் என்னும் துரைமகனார். அதற்காக அவரைப் பழி வாங்க வாஞ்சிநாதன் திட்டமிட்டார்.

கலெக்டர் ஆஷ் துரைமகன் தனது இளம் மனைவியோடு கோடைக்கானலுக்கு ரெயிலில் சென்று கொண்டிருந்தார். வழியில் மணியாச்சி நிலையத்தில் அந்த ரயில் நின்ற தருணத் திலே, ஆஷ் தம்பதிகள் இருந்த பெட்டிக்குள்ளே புகுந்து, தனது கைத் துப்பாக்கியால் சுட்டு, ஆஷ் துரையைக் கொன்று விட்டான் இளைஞர் வாஞ்சிநாதன்.

ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற பின், மணியாச்சி ரயில் நிலையத்திலிருந்த கழிப்பறைக்குள் புகுந்து, வாய்க்குள் தன் கைத்துப்பாக்கியைத் திணித்து, தானே தன்னைச் சுட்டுக் கொண்டு தற்கொலை புரிந்து கொண்டார். வாஞ்சியி னுடைய தன்னலமற்ற உயிர்த்தியாகத்தால் மணியாச்சி ரயில்நிலையத்தின்மண்புனிதம் பெற்றுவிட்டது.ஆம்; ஆஷைக் கொலைபுரிந்ததைவிட, தனது உயிரையும் மாய்த்துக்கொண்ட வாஞ்சியின் தியாகமும் மணியாச்சி மண்ணுக்கு புனிதம்தந்து விட்டது! அதனால், அங்கிருந்து மண் எடுத்து வர திரு. எல். கிருஷ்ணசாமி பாரதியை அரசு தேர்ந்தெடுத்தது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, விடுதலைப் போரில் பங்கு கொண்டு சிறை சென்றவர். அவருடைய மனைவி லட்சுமி அம்மாளும் சிறை புகுந்தவர். இவர்கள் இருவருமே 1937-ல் தமிழக சட்டப் பேரவைக்கு காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். வழக்கறிஞரான இவர், நாடு விடுதலை பெற்றபோது அமைந்த அரசியல் நிர்ணய மன்றத் தில் காங்கிரஸ் சார்பில் அங்கம் பெற்றவர்.

## சென்னை திலகர் கட்டம்

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரை மணற் பரப்பில் "திலகர் கட்டம்" என்றழைக்கப்படும் புனித இடத்திலே சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயர் திரு. த. செங்கல்வராயன் புனித மண் எடுத்தார். இவர் 1941-ல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

திலகர் கட்டத்தைத் தன்னுட்கொண்ட சென்னை கடற்கரை மணற்பரப்பிலே மேடையேறிப் பேசிய தலைவர்களிலே சிலர் அந்த மேடையிலேயே கைதியாயினர். அங்கு பொதுக் கூட்டத்தில் திரண்ட மக்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதுண்டு.

திலகர் கட்டத்தின் புனிதம்பற்றித் தமிழக அரசு தயாரித்து வெளியிட்டுள்ள "இந்திய சுதந்திரத்தின் 40 ஆம் ஆண்டு விழா" என்னும் பிரசுரம் கூறுவதாவது:

"வங்கக் கடலோரம் அமைந்த சென்னைப் பெருநகரின் மெரினா கடற்கரை வெள்ளி மணற்பரப்பு, தேசியப் பெருந் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டிய இடமாகும்.

"பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், விபின் சந்திர பாலர், காந்தியடிகள், சுபாஷ்சந்திர போஸ், சி. ஆர். தாஸ், மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, போன்ற பெருந்தலைவர்களும் பிறரும் பிரிட்டிஷ் ஆட்சிக் கெதிராக இந்தத் தேசம் கிளர்ந்தெழுவதற்காக இங்கு முழக்கமிட்டார்கள்.

''மகாகவி சுப்பிரமணிய பாரதியின் தேசியத் தோழரான சுப்பிரமணியசிவா 1908 ல் சென்னைக் கடற்கரையில் இப் பகுதிக்குத் திலகர் கட்டம் என்ற திருப் பெயரைச் சூட்டினார்.

''இந்த இடம் பற்பல தேசியப் பெருமக்கள் தீரஞ் செறிந்த உரையாற்றக் கண்ட இடம்! பாரதத்தாயின் வீரப் புதல்வர்களும் புதல்வியரும் தங்கள் திருவடியை வைத்த இந்தத் திருமண்ணை உறங்காத வெள்ளலைகள் ஓயாது முத்தமிட்டு இன்றும் ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றன.''

தியாகி சிவா திருவல்லிக்கேணி கடற்கரையின் ஒரு பகுதிக்கு 'திலகர் கட்டம்' எனப் பெயரிட்டது அரசுப் பிரசுரம் கூறுவது போல 1908 ல் அல்ல. அதற்குப் பல்லாண்டு களுக்குப் பின்னர்தான்.

1967 க்குப் பின் ''திலகர் கட்டம்'' என்னும் பெயர் வழக்கில் இல்லை, அந்த இடத்தில் தி. மு. க. அரசு ''சமூக சேவகர்களைக் கொண்டு சீரணி மேடை அமைத்த பின்னர் ''திலகர் கட்டம்'' என்னும் புனிதப் பெயர் வழக்கற்றுப் போய்விட்டது. ''சீரணி மேடை'' என்பது மாற்றுப் பெயர் போல் ஆகிவிட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் அங்கு கூட்டம் நடத்தும்போது கூட, ''திலகர் கட்டம்'' என்னும் புனிதப் பெயர் விளம்பரப்படுத்தப் படுவதில்லை. சுதந்திர நாற்பதாண்டு விழாவில் புனித மண் எடுத்த பின்னரேனும் ''திலகர் கட்டம்'' வழக்கத்திற்கு வருமென்று நம்புவோமாக!

திருப்பூர்

திருப்பூர் நகரில் தியாகி குமரன் என்றழைக்கப்படும் சென்னிமலை குமாரசாமி போலீசாரின் தடியடிக்கு ஆளான இடத்திலே திரு. பெரியண்ண முதலியார் என்பவர் புனித

மண் எடுத்தார். இவர் சட்ட மறுப்புப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகியாவார்.

திருப்பூர் குமரனின் மரணத்திற்குக் காரணமான தடியடி நடந்த இடத்தைப் புனிதமானதாகக் கருதிய தமிழக அரசு பாராட்டுக்குரியதாகும்.

ஐந்திடங்களில் புனித மண் எடுத்த நிகழ்ச்சிகள் பற்றி நாளிதழ்களிலே செய்திகள் சிறப்பாகப் பிரசுரிக்கப்பட்டன. வானொலி—தொலைக்காட்சி ஆகியவற்றிலும் போதிய அளவு விளம்பரப்படுத்தப் பெற்றன.

# தமிழக சட்ட மன்றத்திலே புனித குடங்களுக்கு அஞ்சலி

ஆகஸ்டு 8 ஆம் தேதி காலைக்குள் வேதாரணியத்திலிருந்து நானும், தூத்துக்குடியிலிருந்து திரு. எஸ். என். சோமயாசுலுவும், மணியாச்சியிலிருந்து திரு. எல். கிருஷ்ணசாமிபாரதியும், திருப்பூரிலிருந்து திரு. பெரியண்ண முதலியாரும் புனித மட்குடங்களை சென்னைக்குக் கொண்டு வந்து, ராஜாஜி மண்டபத்திலுள்ள மலர்களால் அழகு செய்யப்பட்டிருந்த மேடையில் வைத்து விட்டோம். திரு. த. செங்கல்வராயன் சென்னையிலேயே புனித மண் எடுத்ததால் 7 ஆம் தேதியன்றே அம்மண்ணைத் தாங்கிய ஐம்பொன் குடத்தை ராஜாஜி மண்டபத்தில் சேர்த்து விட்டார்.

ஆகஸ்டு 9 ஆம் தேதி, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே மிகவும் முக்கியமான நாளாகும். 1942 ஆகஸ்டு 8 ஆம் தேதியன்று பம்பாயில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியிலே 'இந்தியாவிலிருந்து வெளியேறு' என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆணையிடும் தீர்மானம் மிகப் பெரும்பாலானவர் ஆதரவோடு நிறைவேற்றப் பெற்றது.

மகாத்மா காந்தி, அ. இ. கா. க. தீர்மானத்தின்படி பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேறா விட்டால் தாம்

ஒரே நாளில் இவ்வளவு கொடிய அடக்குமுறையைச் சந்தித்த தில்லை. மகாத்மா காந்தியடிகளிலிருந்து கிராம காங்கிரஸ் தலைவர் வரையிலுள்ள லட்சக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் விசாரணை இன்றிக் காவலில் வைக்கப்பட்டனர். மூவர்ண தேசியக் கொடிகூட சட்ட விரோதமான சின்னம் என்று அறிவிக்கப்பட்டது. நாடெங்கணும் பறக்க விடப்பட்டிருந்த கொடிகள் போலீசாரால் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன.

இக் கொடுமைகள் ஆகஸ்டு 9ல்தான் தொடங்கின வாதலால், அந்த நாள் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே மிகவும் புனிதமானதாகிவிட்டது. அதனால், நாடெங்கிலுமுள்ள மாநில சட்டமன்றங்கள் ஆகஸ்டு 9ல் கூடி, புனித மட்கலசங்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்று அனைத்திந்திய சுதந்திர 40ஆவது விழாக் குழு முடிவெடுத் திருந்தது. அதையொட்டி, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு ஆணை அனுப்பியிருந்தது.

தமிழகத்தில் ஐவேறிடங்களில் எடுக்கப்பட்ட புனித மண் களடங்கிய கலசங்களுக்கு அஞ்சலி செலுத்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும் தமிழக சட்டமன்றம் ஆகஸ்டு 9ஆம் நாளில் முற்பகல் 10 மணிக்குக் கூடியது.

மன்றம் கூடுமுன்னர் அதன் அஞ்சலிக்கு வைப்பதற்காக புனித மட்கலசங்கள் ஐந்தும் ராஜாஜி மண்டபத்திலிருந்து எடுக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற தனித்தனி ஜீப் மோட்டாரில் ஐந்து தியாகிகள் தங்கள் கைகளில் ஏந்தி நின்ற வண்ணம் ஊர்வலமாகக் கோட்டைக்கு எடுத்துச் செல்லப் பட்டன.

செய்தி-அறத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வி.வி. சாமிநாதன் ராஜாஜி மண்டபத்திற்கு வந்திருந்து புனித மண்

கலசங்களை வழியனுப்பி வைத்தார். ஜீப் கார்களுக்கு முன்னே குதிரைப் படையினர் இரு புறத்திலும் வரிசையாக அணிவகுத்துச் சென்றனர்.

தனி மோட்டார்களில் செய்தித்துறை இயக்குநர் திரு. கற்பூரசுந்தரபாண்டியன், துணை இயக்குநர் திரு. வி.டி. வீரப்பன் ஆகியோரும், நகர பிரமுகர் சிலரும் கலச ஜீப் கார்களைப் பின்பற்றிச் சென்றனர். அண்ணா சாலை, வாலாஜா சாலை, காமராசர் கடற்கரைச் சாலை வழியாக ஊர்வலம் சென்று, சரியாக 9-45 மணிக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அடைந்தது.

அங்கு சட்டமன்றக் கட்டிடத்தின் கிழக்குப்புற நுழை வாயிலிலே மன்றத்தலைவர் மாண்புமிகு பி.எச்.பாண்டியன், சட்டமன்ற அவை முன்னவர் நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் டாக்டர் நெடுஞ்செழியன் ஆகிய இருவரும் ஐந்து கலசங்களையும் ஏற்றுக் கொண்டனர். அவற்றைக் கொண்டு வந்த ஐந்து தியாகிகளுக்கும் மாலைகளணிவித்து மரியாதை செய்து அவர்களைச் சட்டமன்றம் கூடியிருந்த மண்டபத்துக்கு அழைத்துச் சென்ற காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது. இந்த நிகழ்ச்சியில் சட்டமன்றச் செயலர் திரு. சி.கே. இராமசாமியும், கூடுதல் செயலர் திரு. பள்ளி கொண்ட பெருமாளும் பங்கு கொண்டனர்.

சட்டமன்றத் தலைவர் பி.எச். பாண்டியன் மேசைக்கு முன்பு போடப்பட்டிருந்த பலகை மீது புனித ஐம்பொன் கலசங்கள் ஐந்தும் வைக்கப்பட்டன!

சபாநாயகர் இருக்கைக்கு வலப்புறத்திலுள்ள சட்ட மன்றம் நடைபெறுங்கால் உயர் அதிகாரிகள் அமரும் இடத்தில் கலசங்களைக் கொண்டுவந்த ஐவரும் வரிசையாக

போர் தொடங்கப் போவதாகவும், அதுவே இந்தியாவின் சுதந்திரத்திற்கான இறுதிப் போராக இருக்குமென்றும் கூறினார்.

தமது வீர உரையின் இறுதியிலே, ''செய் அல்லது செத்து மடி என்பதே இந்தியரிலே ஒவ்வொருவருக்கும் யான் இடும் கட்டளை'' என்று சொல்லி போர்ப் பிரகடனம் செய்தார்.

தமது பிரகடனப்படி காந்தியடிகள் போர் தொடங்கு முன்பே ஆகஸ்டு 9 பிறந்த இரவிலே இந்தியா மீது பிரிட்டன் போர் தொடுத்துவிட்டது! அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி, அதற்குட்பட்ட காரியக் கமிட்டி, அவற்றின் கீழ் மாநிலந் தோறும் இயங்கும் மாகாண காங்கிரஸ் கமிட்டிகள்—காரியக் கமிட்டிகள், அவற்றின் கீழ் மாவட்டந்தோறும் உள்ள மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் ஆகியவற்றின் பெயர்களை முறையாகச் சொல்லி அவையனைத்தும் சட்ட விரோதமான அமைப்புகள் என அரசு பிரகடனப்படுத்தியது.

அவற்றின் அலுவலகங்களை போலீசார் கைப்பற்றி சீல் வைத்து விட்டனர். காங்கிரஸ் கமிட்டிகள் பெயரால் வங்கி களின் கணக்கிலிருந்த பெரு நிதிகள் அரசு உத்தரவின் பேரில் முடக்கப்பட்டு விட்டன.

நாடெங்குமுள்ள பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் அவசரச் சட்ட மொன்றையும் வைசிராய் பிறப்பித்தார். காந்தியடிகளின் ''அரிஜன்'' வார இதழ் உள்பட நாடெங்கணு மிருந்து வெளிவந்து கொண்டிருந்த பல்வேறு நாள்—வார—மாத இதழ்கள் தடை செய்யப்பட்டன. ''அரிஜன்'' அச்சகம் அரசுடைமையாக்கப்பட்டது.

பம்பாய் போலீஸ் உயர் அதிகாரிகள் காந்தியடிகளைக் கைது செய்து, புனாவிலுள்ள ஆகாகான் அரண்மனையில்

காவலில் வைத்தனர். அவருடைய மனைவி கஸ்தூரிபா காந்தி, சிஷ்யை மீராபென், காரியக் குழு உறுப்பினர் திருமதி சரோஜினி தேவி, அடிகளின் செயலாளர் மகாதேவ தேசாய் ஆகியோரும் அவருடன் சேர்த்துக் காவலில் வைக்கப்பட்டனர்.

உலக கோடீசுவரர்களில் ஒருவரான ஆகாகானின் மாளிகையானது பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலால் "அரை நிர்வாணப் பக்கிரி" என்று வருணிக்கப்பட்ட காந்தியடிகளை அடைக்கும் சிறைச்சாலை ஆயிற்று.

காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசாதும், பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் படேல் உள்ளிட்ட காரியக் குழு உறுப்பினர் அனைவரும் மகாராஷ்டிரத்திலுள்ள அகமத்நகர் கோட்டைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

பம்பாயில் நடந்த அ.இ.கா.க. கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, தத்தம் ஊர் திரும்பிக் கொண்டிருந்த மாநிலத் தலைவர்களில் பெரும்பாலோரை வழியிலேயே போலீசார் வேட்டையாடி அவர்கள் சொந்த மாநிலங்களிலுள்ள சிறைகளில் அடைத்தனர்.

ஆகஸ்டு 9ஐ அடுத்துள்ள நாட்களில் மாநில-மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளின் நிர்வாகிகள் அனைவருமே வேட்டையாடப்பட்டு, மாநிலந்தோறுமுள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவர்களில் நானும் ஒருவன். அப்போது நான் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு வெறி பிடித்துவிட்டதோ என்று ஐயுறுமளவுக்கு, அகிம்சை வழியில் செயல்பட்டு வந்த காங்கிரஸ் அமைப்பை அழித்தொழிக்க முயன்றது. உலகில் எந்த ஒரு நாட்டிலும் சட்ட ரீதியாக இயங்கிக் கொண்டிருந்த-சாத்வீகத்தில் நம்பிக்கை கொண்ட—ஒரு அரசியல் அமைப்பு

அமர்த்தப்பட்டனர். எனக்கு அருகில் தலைமைச் செயலாளர் திரு. ஏ, பத்மநாபன் அமர்ந்தார்.

சரியாக 11 மணிக்கு வழக்கம்போல மெய்க்காவலர் இருவர் இருபுறமும் வர, அவைத் தலைவர் பி.எச் பாண்டியன், நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ஆகிய இருவரும் முன்னே வழிகாட்டிச் செல்ல ஆளுநர் மேதகு எஸ்.எல். குரானா அவைக்குள் நுழைந்து வழக்கமாக சபாநாயகர் அமருமிடத்தில் அமர்ந்தார். இந்தச் சம்பிர தாயச் சடங்கின்போது அவை உறுப்பினர்களும் ஐந்து தியாகி களும் சிறப்புப் பார்வையாளரும் எழுந்து நின்று ஆளுநருக்கு மரியாதை செய்தனர்.

சபாநாயகரின் சிறப்பு அழைப்பை ஏற்று, மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் திரு. ஓ.வி. அளகேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. எம். கலியாணசுந்தரம், திருமதி சரோஜினி வரதப்பன் ஆகியோர் சட்டமன்ற மண்டபத்தின் மேன் மாடியிலுள்ள பார்வையாளர் இடத்தில் அமர்ந்திருந் தனர். இவர்களில் முதலிருவரும் விடுதலைப்போரில் சிறை சென்ற தியாகிகளாவர்.

இதே கட்டிடத்தில் சட்டமன்ற மேலவை நடந்தபோதும் நான் உறுப்பினராக இருந்திருக்கிறேன். பின்னர், மேலவை வேறிடத்திற்கு மாற்றப்பட்டு, பேரவை நடந்தபோது அதிலே யும் நான்காண்டுக் காலம் இருந்தேன். அப்போதெல்லாம் அந்த மண்டபத்தில் அமர்ந்திருந்த சரித்திர நாயகர்களுள் என் இதயத்தில் இன்றளவும் இடம் பெற்றவர்களான ராஜாஜி, அண்ணா ஆகியோர் முதல்வருக்குரிய இடத்தி லிருந்து செயல் புரிந்த நிலையையும் கண்டிருக்கிறேன். அக்காலத்துக் காட்சிகள் என் மனக்கண் முன் நிழலாடின,

சட்ட மன்றத்தில் நாட்டுப் பாடலும் தமிழ் வாழ்த்துப் பாடலும் இசைக்கப்பட்ட பின்னர், புனித மண் கலசங்களை ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முதலில் வேதாரண்யத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கலசத்தை என்னிடமிருந்து பேரவைத் தலைவர் மாண்புமிகு பி. எச். பாண்டியன் பெற்றுக் கொண்டார். அப்போது அவையில் குழுமியிருந்த உறுப்பினர்களும் சிறப்புப் பார்வையாளர்களும் எழுப்பிய கரவொலி என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

அடுத்துத் தூத்துக்குடி, மணியாச்சி, சென்னை, திருப்பூர் ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித மண் கலசங்களையும் மாண்புமிகு பி. எச். பாண்டியன் ஒவ்வொன்றாகப் பெற்றுக் கொண்ட போதும் அவையினர் கரவொலி எழுப்பினர்.

பின்னர், ஆளுநர் மேதகு எஸ். எல். குரானா ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவர் தமது பேச்சில்,

''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்
என்றுமடியு மெங்கள் அடிமையில் மோகம்
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்''

என்னும் பாரதியாரின் பாடல் வரிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினார். பாரதியின் இந்த மணிவாசகம், கண்ணபெருமானை நோக்கி அவர் செய்த பிரார்த்தனையாகும். அந்தப் பிரார்த்தனை பலித்து நாடு சுதந்திரம் பெற்றுவிட்டதோடு, அது கிடைத்த நாற்பதாமாண்டையும் கொண்டாடும் பேற்றினைப் பெருமிதத்தோடு ஆளுநர் விரித்துரைத்தார். பேச்சின் முடிவில் ''ஜெய் ஹிந்த்'' என்று காக்ஷித்தார்.

பஞ்சாப் மாநிலத்தவரான ஆளுநர் எஸ். எல். குரானா, பாரதியாரின் வாசகத்தை உணர்ச்சிப் பெருமிதத்தோடு கூறியது என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவையினர், கைதட்டி ஆரவாரம் செய்து ஆளுநரின் பாரதி பக்தியைப் பாராட்டினர்.

அடுத்து, நிதியமைச்சரும் சட்ட மன்ற அவை முன்னவருமான நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், ஆளுநரை விடவும் அதிக நேரம் உரையாற்றினார். ஆளுநருடன் போட்டியிடுபவர் போல பாரதியாரின் பாடல்களை இரண்டிடங்களில் எடுத்தாண்டார்.

"ஆடுவோமே பள்ளுப்—பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
ஆடுவோமே-பள்ளுப்— பாடுவோமே"

என்னும் வரிகளை எடுத்துக் காட்டிவிட்டு,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே—தமிழ் ஆட்சியிலும்
மாட்சியிலும் கூடுவோமே ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் வரிகளையும் இணைத்துக் காட்டினார்.

இந்த இணைப்பானது, என் செவிக்கு மிகவும் இனித்தது. அனைத்து இந்தியாவுக்கும் ஆனந்த சுதந்திரம் தேடும் பணியிலே பங்கு கொண்டவன் என்பதோடு, அந்தச் சுதந்திர இந்தியாவிலே தமிழகத்தில் மாட்சி மிக்க தமிழ் ஆட்சியைக் காண்பதற்கும் பாடுபட்ட பெருமை எனக்கு உண்டுதானே! அதனால், எட்டயபுரம் கவிஞரின் இந்திய தேசியத்தையும், புதுவைக் கவிஞரின் தமிழ்த் தேசியத்தையும் நாவலர் இணைத்துக் காட்டியது எனக்காகவே சொல்லியது போலிருந்தது.

ஆளுநரும் நாவலரும் தங்களுடைய நீண்ட சொற்பொழி விலே ஒரு கடமையை மறந்ததாகவே கருதினேன். ஆகஸ்டு 9ல் தமிழக சட்ட மன்றம் கூடியது, சுதந்திர நாற்பதாம் ஆண்டைக் கொண்டாடுவதற்குத்தான் என்றாலும் அதிலே பிரதான பணியாக இருந்தது ஐவேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட ஐம்பொற்குடங்களை வரவேற்று, அவற் றைக் கொண்டு வந்தவர்களைப் பெருமை செய்வதாகும். ஆனால், ஆளுநரோ. அவை முன்னவரோ, அதுபற்றித் தங்கள் பேச்சில் எதுவும் கூறவில்லை. அடுத்து, சட்ட மன்றத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் தலை வர்கள் பேசினார்கள்.

திருமதி யசோதா (இ. காங்கிரஸ்) திரு. கி. மனோகரன் (தி. மு. க.), திரு கு. ரமணி (மார்க்சிஸ்டு), திரு. எ எஸ். ஏ. ஆறுமுகம் (ஜனதா), திரு. பொ. உத்திராபதி (இந்திய கம்யூனிஸ்டு). ஜனாப் ஆ. கா. அ. அப்துல் சமது (முஸ்லிம் லீக்), திரு. பெ. முத்துவேல் ஆகியோர் தத்தம் கட்சியின் சார்பில் உணர்ச்சிப் பெருமிதத்தோடு உரையாற்றி னார்கள். அவர்களுடைய பேச்சுக்களிலே என்னைப் பெரிதும் கவர்ந்தது ஒவ்வொருவருமே புனித ஐம்பொற்குடங்களையும், அவற்றைக் கொண்டு வந்தவர்களையும் குறிப்பிட்டு, பெருமைப்படுத்தியதாகும். பாரதியார் பாடல்வரிகளை இவர் களும் சுட்டிக்காட்டிப் பேசினர்.

ஜனாப் அப்துல் சமது எப்போதுமே அழகு தமிழில் பேசக் கூடியவர். அன்று அமுதத் தமிழிலே பேசினார். புனித மட்குடங்களையும், அவற்றைக் கொண்டு வந்தவர் களையும் முழுமையாகப் பாராட்டும் வகையில் அவரது பேச்சு அமைந்தது.

தி. மு. க. சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் என்ற பொறுப்பில் பேசிய கி. மனோகரன், ''பாஞ்சாலங்

குறிச்சியிலிருந்து புனித மண் எடுக்க ஆட்சி தவறி விட்ட தாகக் குற்றஞ் சாட்டினார். ஒரு புனிதமான விழாவைக் கொண்டாடக் கூடியிருந்த மக்கள் அவையிலே, தற்போதைய அ. இ. அ. தி. மு. க ஆட்சியைக் குறைகூறும் பாணியிலே அவர் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை. ஆளுநரும் இடை மறித்து, 'உறுப்பினர் விவாதத்தை எழுப்பும் வகையில் பேசு வதைத் தவிர்க்க வேண்டும்' என்று கூறினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கிய 1885 லிருந்து தான் சுதந்திர இயக்க வரலாறு தொடங்குவதாக மத்திய அரசு நினைக்கிறது. இந்தக் கண்ணோட்டம் சரியானது அல்ல. இதனை எத்தனையோ முறை எனது நூல்கள் சில வற்றில் நானே எடுத்துக் காட்டியிருக்கிறேன். "விடுதலைப் போரில் தமிழகம்" என்னும் நூலிலேயும் இதனை விளக்கி யுள்ளேன்.

பாஞ்சாலங்குறிச்சி மண்ணுக்குள்ள புனிதத் தன்மை யானது, வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாளிலிருந்தே தமிழ் மக்களால் உணரப்பட்டு விட்டது. இப் போது மண் எடுத்துத்தான் உணர்த்த வேண்டுமென்பதில்லை. அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களுக்குக் குழந்தை பிறக்கும்போது, பாஞ்சைப் பதி மண்ணைக் கரைத்து, அதிலிருந்து ஒரு சொட்டு நீரை எடுத்து குழந்தை யின் நாவில் தடவுவது வழக்கமாக இருந்து வருகிறது. அப் படித் தடவினால், அந்தக் குழந்தைக்கு வீரம் இருக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். இது ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் எழுதிய நூல்களிலும் எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது.

தமிழக அரசு பாஞ்சாலங்குறிச்சியில் மண் எடுக்கத் தவறியதாலேயே கட்டபொம்மனின் வீர வரலாற்றை அது

புறக்கணிக்கும் உள்நோக்கம் உடையது என்று கருதுவதை என்னால் ஏற்க இயலாது.

நெல்லை நகரைத் தலையிடமாகக் கொண்ட ஒரு மாவட்டத்திற்கு கட்டபொம்மன் பெயரைச் சூட்டியிருக்கிறது டாக்டர் எம். ஜி. ஆர். அரசு. அது நிகழ்ந்து ஆறு மாதம் கூட ஆகவில்லை. ஆகவே, அந்த அரசின் மீது குற்றஞ் சொல்வதைத் திரு. கி. மனோகரன் அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

சட்ட மன்றத்திலுள்ள கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் பேசி முடித்த பின்னர், சபாநாயகர் பி. எச். பாண்டியன் பேசினார். அன்று பேசியவர்களிலே அவர்தான் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டார். ஆனால், அவரது பேச்சு இலக்கிய மணங் கமழுவதாக இருந்தது. தமது சொந்த மாவட்டமான பழைய நெல்லை மாவட்டத்தின் வரலாற்று ரீதியான பெருமைகளை எடுத்துக் காட்டினார். தமது மாவட்டத்தில் பிறந்த சுதந்திர வீரர்களின்—மகாகவியின் பெயர்களைப் பெருமிதத்தோடு எடுத்துக் காட்டினார்.

அவரது பேச்சு இரண்டு முக்கிய விஷயங்களைக் கொண்டதாக இருந்தது. ஒன்று, மகாகவி பாரதியாரின் பெருமையை உணர்த்துவது; மற்றொன்று, நாடு சுதந்திரம் பெற்ற பின் முப்பது ஆண்டுகள் கழித்துத் தோன்றிய டாக்டர் எம். ஜி. ஆர். அரசின் சாதனைகளை விளக்குவது.

அவரது பேச்சு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவர், தமது பேச்சின் தொடக்கத்திலேயே புனித மண் கலசங்களைக் கொண்டு வந்த ஐவரையும்—ஒவ்வொருவருடைய பெயரையும் சொல்லி—பாராட்டியதோடு, அஞ்சலியும் செலுத்தினார். இறுதியில், சரியாக நண்பகல் 12 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் கீழ் வரும் தீர்மானத்தைப் படித்தார் :

"இந்தியாவின் விடுதலைப் போராட்டங்கள் பலவற்றிலும் வீரத்தோடு கலந்துகொண்டு, தங்களுடைய தணியா நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி, உயிர்—உடல்—உடைமைகளை நாட்டுக்கு ஈந்த பல்லாயிரக்கணக்கான வீரத் தியாகிகளுக்கு இச் சிறப்புக் கூட்டம் தனது பெருமை மிகு அஞ்சலியைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

"இந்தியாவின் ஒற்றுமையிலும் இந்திய மக்களின் ஒருமைப்பாட்டுணர்விலும் ஆழ்ந்த நம்பிக்கையையும், அசைக்க முடியாத நன்மதிப்பையும் இந்தச் சிறப்புக் கூட்டம் இந்த நேரத்திலும் மீண்டும் வலியுறுத்துகிறது.

"எதிர்காலத்தில் அரசியல் சனநாயக நெறிகளைப் பேணிவளர்க்கவும், பொருளியல் சமதர்மக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், சமூகவியல் சமத்துவப் பண்பாட்டு நெறிகளுக்கு ஆக்கம் பயக்கவும், சாதி, சமய, இனவேறுபாடுகளற்ற, வளமான, வலுவான பெருமைக்குரிய புகழுக்குரிய புதிய இந்திய சமுதாயத்தை உருவாக்கும் பணியில், மீண்டும் ஒவ்வொருவரும் நம்மை ஒப்படைத்துக் கொள்வது என்றும் இந்தச் சிறப்புக் கூட்டம் முடிவு செய்கிறது."

தீர்மானம் கரவொலியின் வாயிலாக ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அவையினர் அனைவரும் எழுந்து நின்று, விடுதலைப் போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் இரண்டு நிமிடநேரம் நடைபெற்றது.

பின்னர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐம்பொற் குடங்களை அவற்றை டில்லிக்குக் கொண்டு செல்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஐவரிடம் பேரவைத் தலைவர் பி. எச். பாண்டியன் கொடுத்தார்.

மட்குடங்களை விடுதலை வீரர்கள் இருவரிடமும், சாதனை வீரர்கள் மூவரிடமுமாக ஐவரிடம் கொடுத்தனுப்ப வேண்டுமென்று இந்திய அரசு தமிழக அரசுக்கு அறிவித்திருந்தது. விடுதலை வீரர்களில் ஒருவரும், சாதனை வீரர்களிலே ஒருவரும் பெண்மணியாக இருக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தது.

அதன்படி, வேதாரணியத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வீரமண் அடங்கிய கலசத்தை விடுதலை வீரன் என்ற வகையிலே என் வசம் (ம. பொ. சிவஞானம் அவர்களிடம்) முதலில் தந்தார் பேரவைத் தலைவர்.

அடுத்து, தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மண் அடங்கிய கலசத்தை விடுதலை வீராங்கனை திருமதி எம் விசயலட்சுமியிடமும்,

மணியாச்சி ரயில் நிலையத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வீரமண் அடங்கிய கலசத்தை விளையாட்டு வீராங்கனை செல்வி பவுசியா பேகம் அவர்களிடமும்,

திலகர் கட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மண் அடங்கிய கலசத்தை விளையாட்டு வீரர் திரு. எம். அண்ணாவியிடமும், திருப்பூரிலிருந்து சேகரிக்கப்பட்ட வீர மண் அடங்கிய கலசத்தை விளையாட்டு வீரர் திரு. ஜி. இ. ஸ்ரீதரன் அவர்களிடமும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்தார்.

நாட்டுப் பண் இசைக்கப்பட்ட பின்னர், பிற்பகல் 12-05 மணியளவில் சட்டமன்ற சிறப்புக் கூட்டம் இனிது நிறைவேறியது.

இதே சட்டமன்ற மண்டபத்திலே 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று நள்ளிரவில் இந்திய சுதந்திர வெள்ளி

விழாவை யொட்டிக் கூடிய சட்டமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திலேயும் நான் கலந்து கொண்டேன். அப்போது சட்டமன்ற மேலவையின் துணைத்தலைவராக இருந்தேன். கலைஞர் டாக்டர் மு. கருணாநிதியை முதலமைச்சராகக் கொண்டு தி. மு. க. ஆட்சி நடந்த காலமது. சிறப்புக் கூட்ட மாதலால் சட்டமன்ற மண்டப இருக்கைகள் இன்னாருக்கு இன்னது என்று ஒதுக்கப்படவில்லை.

மேலவையின் துணைத் தலைவன்—மன்ற உறுப்பினர்களிலே வயதில் மூத்தவன்—என்ற முறையிலே அமைச்சர் பெருமக்கள் அமரும் வரிசைக்கு எதிர்வரிசையில் முதலிடத்தில் உட்காரும் வாய்ப்பைப் பெற்றேன்.

அன்றைய கூட்டத்திலும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் என்ற முறையில் நானும் பேசினேன்.

தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது நான் வாழும் காலத்திலேயே நாடு சுதந்திரம் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை. ஆயினும், யான் செய்த பெரும் பேற்றால் நாடு சுதந்திரம் பெற்றதைக் கண்டேன்.

அந்த நாளிலே லட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்த திலகர் கட்டப் பொதுக் கூட்டத்திலே முதலமைச்சர் ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார் தலைமையில் இதய எழுச்சியோடு சொற்பொழி வாற்றினேன்.

சரியாக 25 ஆண்டுகள் கழித்து இந்திய சுதந்திர வெள்ளி விழா நடைபெற்ற நாளிலே சட்ட மன்றத்தின் சிறப்புக்

கூட்டத்திலே சொற்பொழிவாற்றினேன். அந்தச் சொற் பொழிவை இங்கு தருவது வாசகர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று நம்புகிறேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

"சரித்திரச் சிறப்புமிக்க இந்தக் கூட்டத்தில் பேசுகின்ற வாய்ப்பினை என் வாழ்க்கையில் இன்று நான் பெற்றதற்காக மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

"விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறைப்பட்ட அந்தக் காலத்திலே—இருட் சிறையில் அடைப்பட்டு கம்பிகளை எண்ணிக்கொண்டிருந்த நாளிலே, 'நம் வாழ்நாளில் சுதந் திரத்தை நாம் எங்கே காணப்போகிறோம்?' என்றெண்ணி எனது ஏழை நெஞ்சம் ஏங்கியதுண்டு. அந்த நெஞ்சம் சுதந்திரத்தைப் பார்த்து விட்டது மட்டுமல்ல; சுதந்திர இந்தியாவிலே கால் நூற்றாண்டுக் காலம் வாழ்ந்தும் விட்டது என்பதை நினைக்கின்ற பொழுது என் மனம் அடையும் மகிழ்ச்சியை எடுத்துரைக்க எனக்கு வார்த்தையே கிடைக்கவில்லை. உணர்ச்சியின் வடிவமாக இந்த அவை யிலே நிற்கிறேன்.

"விடுதலைப் போரை முதன் முதலாகத் தொடங்கி வைத்த வீரபாண்டியக் கட்ட பொம்மன் பிறந்த தமிழ் மண்ணிலே நின்று விடுதலையின் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிற பெருமையை நினைக்கும் போது என் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிகிறது.

"ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க்கப்பலோட்டிய தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த தமிழ் மண்ணிலே நின்று சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடு கிறோம் என்பதை நினைக்கும்போது என் இதயம் ஆனந்தத் தால் விம்முகின்றது.

"விடுதலைக்குப் போராடிய வீரர்களுள் வீரராக நின்று, ஏகாதிபத்தியத்தின் இருட் சிறையில் அடைப்பட்டு—கல்

தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியின் தாய்மொழியான தமிழ்மொழிக்கு வாழ்வு தந்தார் பாரதியார். அவர், இந்திய விடுதலைப் போரிலே முதன் முதலில் தோன்றிய தேசியக் கவியாவார்—போர்க் களப் புலவராவார். அந்தப் புலவர் பிறந்த மண்ணிலே நின்று விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாடும் பெருமையைப் பெற்றதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

''இந்தியாவின் சுதந்திரத்தில்தான் தமிழினத்தின் சுதந்தரம் அடங்கியிருக்கிறது என்று நம்பினோம். இந்தியா உரிமை பெற்றால்தான் தமிழினம் உரிமைபெற முடியுமென்று நம்பினோம், இந்த நம்பிக்கையோடுதான் பல கோடி இந்தியர்களோடு தமிழ் மக்களாகிய நாமும் சேர்ந்து போராடினோம். ஆகஸ்டுப் பதினைந்திலே நம்நாடு பெற்றது பொதுவான விடுதலைதான் என்றாலும், அதன் ஒளி பரவாத அடிமை இருள் சூழ்ந்த—பகுதிகள் இன்னும் நம் நாட்டில் இருக்கின்றன. காலம் கடந்து விட்டதென்றாலும், அடுத்து வரும் பொன்விழாவிற்குள்ளாகவேனும் அனைத்து இனங்கள் மீதும்-சாதிகள்மீதும் சுதந்திர ஒளி பரவுமென்று நம்புகிறேன். அதைப்பார்க்க-அதற்காகப் பாடுபட-என்னுடைய பிள்ளை களை பேரப்பிள்ளை விட்டுவிட்டுப் போகப் போகிறேன். ஏன்? நானும்இருந்து பார்ப்பேன்; நாம் எல்லோரும் இருந்து பார்ப் போம் என்றும் நம்புகிறேன்.

''தனி மனிதனாக நின்று, உலகம் காணாத புதிய முறை யிலான போரில் தலைமை தாங்கி, விடுதலை பெற்ற பாரதத்தில் அதிகாரத்தை ஏற்காமல் ஆண்டியாக இருந்த அண்ணல் காந்தியடிகளின் புனித ஆன்மாவுக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துகிறேன்.

''இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டு உயிர் நீத்த அத்தனைத் தியாகிகளின் ஆன்மாக்களுக்கும் என்னுடைய தமிழரசுக் கழகத்தின் சார்பில் அஞ்சலி செலுத்துகிறேன்.

"இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் விடுதலை வீரர்களுக்கு—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்—தலைவணங்கி மரியாதைசெலுத்துகிறேன். அவர்களில் ஒருவனாக இருந்து வாழும் பேற்றினை எனக்குத் தந்த இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

சுதந்திர வெள்ளி விழா நாளிலே தமிழக சட்ட மன்றத்திலே நின்று உரையாற்றியபோது அதே சட்ட மன்றத்தால் புனித மண் கொண்டு வந்த காரணத்தால் கௌரவிக்கப் படுவேன் என்று நான் கனவு கூடக் காணவில்லை.

வெள்ளி விழாவுக்குப் பின்னும் பதினைந்தாண்டு காலம் இறைவன் என்னை வாழ வைத்தான். அதனால் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அரசு, சட்ட மன்றம் என்னைக் கௌரவிக்கும் பேற்றினைத் தந்தது.

ஆகஸ்டு 9ல் சட்டமன்றக் கூட்டம் முடிந்ததும் புனித மண் எடுக்கும் பணியில் என் சகாக்களாக இருந்த நான்கு விடுதலை வீரர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, புதிதாக வந்த ஒரு விடுதலை வீராங்கனையோடும், மற்றும் மூன்று சாதனை வீரர்களோடும் தோழமை கொண்டேன்.

# நாடாளு மன்றத்திலே நாற்பதா மாண்டு விழா

ஆகஸ்டு 9 அன்று மாநிலந்தோறும் சட்ட மன்றக் கூட்டங்கள் நடந்து, அந்தந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட புனிதத் தலங்களில் எடுக்கப்பட்ட புனித மண்கள் கொண்ட கலசங்கள் ஏற்கப்பட்ட பின், அவை ஆகஸ்டு 12க் குள் டில்லி மாநகருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென் பது மத்திய விழாக்குழுவின் திட்டமாகும்.

அதையொட்டி, ஆகஸ்டு 9 ல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றம் கூடிக் கலைந்த பின், சபாநாய கரிடம் பெற்ற புனித மண் குடங்கள் திரும்பவும் அங்கிருந்து ஊர்வலமாகக் கொண்டு போய் ராஜாஜி மண்டபத்தில் சேர்க்கப்பட்டன.

ராஜாஜி மண்டபம் பற்றிய சுவையான செய்தி யொன்றை இங்கு சொல்ல விரும்புகிறேன். ராஜாஜி மண்டபத்தில் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி கள் நடைபெற்றதுண்டு. மங்கல நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, அமங்கல நிகழ்ச்சிகளும் நடந்ததுண்டு—ஏன், ராஜாஜி உயிர் நீத்ததும், அவரது பிரேதம் அந்த மண்டபத்தில் தான் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அங்கிருந்து லட்சக்கணக்

கரன மக்கள் அடங்கிய ஊர்வலமாக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மங்கல நிகழ்ச்சிகளில் ராஜாஜியின் பிறந்த நாள் முதன் முதலாக அந்த மண்டபத்தில் நடைபெற்றதைச் சொல்ல லாம். அப்போது அதன்பெயர் ''விருந்தினர் மண்டபம்'' என்பதுதான். சுதந்திரத்திற்குப் பின் சென்னை மாகாணத் தின் முதல் இந்திய ஆளுநராக பவநகர் அரசர் நியமிக்கப் பட்டார். அவரது தலைமையில் ராஜாஜியின் பிறந்த நாளைக் கொண்டாட 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி இந்த மண்டபத்தில்தான் ஏற்பாடு செய்தார். அப்போது மாகாண முதலமைச்சராக இருந்த திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டி யாரும் ராஜாஜி பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டார். நானும் கலந்துகொண்டு பேசினேன்.

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, ''விருந்து மண்டபத் திற்கு ராஜாஜி மண்டபம் எனப் பெயரிடுமாறு நீங்கள் பேசும்போது அரசுக்குக் கோரிக்கை விடுங்கள்'' என்று என்னிடம் கூறினார். நானும் அதன்படிச் செய்தேன். எனக்குப் பின் பேசியவர் களும் என் கருத்துக்கு ஆதரவளித்தனர். இறுதியில் பேசிய முதல்வர் ஓமந்தூர் ரெட்டியார், கோரிக்கையை ஏற்பதாகப் பிரகடனம் செய்தார். அதனையடுத்து, தாமதமின்றி மாகாண அரசின் ஆணையும் வெளிவந்தது.

இதைப் பத்திரிகைகளில் பார்த்த ராஜாஜி, ''என் பெயரைக் கொண்ட மண்டபத்திலே நாடகம், நடனம் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்துவதை நான் விரும்ப வில்லை'' என்று சென்னை மாகாண முதல்வர் ரெட்டி யாருக்கு எழுதினார். முதல்வரும் அதை ஏற்றார்.

அத்தகு புனித வரலாற்றைப் பெற்ற ராஜாஜி மண்டபத் திலே, அந்த மாபெரும் தலைவர் சட்டத்தை மீறி

உப்பெடுத்துச் சிறைப்பட்ட வேதாரணியத்தில் எடுக்கப்பட்ட புனித மண்ணைக் கொண்ட கலசம் உட்பட ஐந்து கலசங்கள் ஆகஸ்டு 8 முதல் 12 வரை வைக்கப்பட்டிருந்தன.

நாள்தோறும் பொது மக்கள் அணி அணியாக வந்து புனித மட்குடங்களைத் தரிசித்து வழிபடுவார்கள் என்று நம்பப்பட்டது. அப்படியும் பலர் வழிபட்டார்களென்றாலும், அரசும் என்போன்ற தேசிய வாதிகளும் எதிர் பார்த்த அளவுக்கு மக்கள் திரண்டு வரவில்லை. காந்திஜி, நேருஜி, இந்திராகாந்தி ஆகியோருடைய புனித அஸ்திக் கலசங்கள் அதே ராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட போது, காலை முதல் மாலை வரை மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். அது, துக்கச் சூழ்நிலையில் ஏற்பட்ட பக்தி உணர்வு. சம்பிரதாயமான சுதந்திர நாற்பதாமாண்டு விழாவிலே அந்த மன எழுச்சியை மக்களிடம் எதிர்பார்க்க முடியாதுதானே!

ஆகஸ்டு 12 ஆம் தேதியன்று மாலை புனித மண் கலசங்கள் ஐந்தையும் ராஜாஜி மண்டபத்திலிருந்து எடுத்துக் கொண்டு மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு நானும் மற்ற நான்கு பேரும் சென்று, ஏர் இந்திய விமானத்தில் டில்லிக்குப் பயணமானோம். தமிழக அரசின் செய்தித் துறை இயக்குநர் திரு.கற்பூரசுந்தர பாண்டியன், துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் ஆகியோரும் தேசிய நண்பர்கள் பலரும் வந்திருந்து வழியனுப்பி வைத்தனர்.

நாங்கள் சென்ற விமானத்தில் தமிழக ஆளுநர் மேதகு எஸ். எல். குரானாவும், பாண்டிச்சேரி துணைநிலை ஆளுநர் மேதகு திரிபுவன பிரசாத் திவாரியும் எங்களோடு பயணஞ் செய்தனர். இல்லை, அவர்களோடு சேர்ந்து நாங்களும் பயணம் செய்தோம். அவர்களிருவரும் ஆகஸ்டு 13 ல் கூடும் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தில் சிறப்புப் பார்வையாள

ராகக் கலந்து கொள்ள குடியரசுத் தலைவரால் டில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இரவு 9-30 மணிக்கு டில்லி பாலம் விமான நிலையத்தில் இந்திய அரசின் அதிகாரிகளால் கலசங்கள் வரவேற்கப்பட்டன.

தமிழக அரசால் அனுப்பிவைக்கப்பட்ட விடுதலை வீரர்களும், சாதனை வீரர்களுமான நாங்கள் ஐவரும் ''தமிழ் நாடு இல்லத்தில்'' எங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தனித்தனி அறைகளில் தங்கினோம்.

என் மகன் திரு. ம. சி. திருநாவுக்கரசு இருந்திருந்தால் அவர் தப்பாமல் என்னுடன் டில்லிக்கு வந்து எனக்கு உதவியாக இருந்திருப்பார். நான் ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்ற எனது நூலுக்காக டில்லி சாகித்திய அகடமியிடம் பரிசுபெற்ற விழாவிலே என் மகன் திருநாவுக்கரசு கலந்து கொண்டு எனக்கு நடந்த சிறப்பைக் கண்டு களித்தார்.

மகனில்லாத குறையைப் போக்க என் இளைய மகள் திருமதி மாதவி தன் கணவர் திரு. கே. டி. பாஸ்கருடன் டில்லிக்கு வந்திருந்தது என் மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. குடும்பத்தினரைப் பிரிந்து நாட்கணக்கில் வாழ்க்கை நடத்துவது எனக்கு மகிழ்ச்சி தருவதாக இருப்பதில்லை. ஆண்டுக் கணக்கில் சிறையில் அடைப்பட்டிருந்த போதும், பொது வாழ்க்கை காரணமாக வாரக் கணக்கில் சென்னைக்கு வெளியே சுற்றுலாச் செய்த போதும் குடும்பத்தைப் பிரிந்து பழக்கப்பட்டவன்தா னென்றாலும், ஏனோ இந்த முதுமைப் பருவத்திலே குடும்பச் சூழ்நிலை இல்லாத நாட்களில் மனதில் மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. திறந்த மனத்துடன் பேசிப் பழக நம்பிக்கையான நண்பர்கள் உடனிருந்து விட்டால், அவர்களை என் குடும்பத்தினராகக் கருதி

மகிழ்ச்சியோடு நாளைக் கழிப்பேன். அப்படிப் பட்டவர் எவரும் என்னுடன் டில்லிக்கு வரவில்லை. புனித மண் குடங்களுடன் வந்த நால்வரும் எனக்குப் பழக்க மில்லாத வர்கள்.

புதுடில்லி 'தமிழ்நாடு இல்லத்'தில் என் இளைய மகளும் மருமகனும் என்னுடனிருந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர்கள் ஒரு நாளைக்கு முன்னதாகவே டில்லி சென்றுவிட்டனர்.

ஆகஸ்டு 13 ஆம் தேதியன்று மாலை நாடாளுமன்றத் தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் மத்திய மண்டபத்தில் கூடியது. இது, சுதந்திர நாற்பதாண்டு விழாவை யொட்டி நடந்து சம்பிரதாயக் கூட்டந்தான்.

குடியரசுத் தலைவர் பதவிக்குப் புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள மேதகு ஆர். வெங்கடராமன், நாடாளு மன்றத் தலைவர் மாண்புமிகு பலராம் ஜாக்கர், பிரதமர் ராஜீவ் காந்தி, மாநிலங்கள் அவையின் துணைத் தலைவி பிரதிபா தேவ்சிங் பட்டேல் ஆகியோர் தனிக்குழுவாக விழா மேடையில் அமர்ந்திருந்தனர்.

நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு மாநிலங்களின் ஆளுநர்களும், முதல்வர்களும் மத்திய அரசால் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களிலே பெரும் பாலோர் கலந்து கொண்டனர்.

அரங்கிலே மாநிலங்களிலிருந்து புனித மண் குடங்களைக் கொண்டு வந்தவர்கள் அமர்வதற்கு தனியிடம் எதுவும் ஏற்பாடாகியிருக்க வில்லை. ஆனால், எனக்குத் தனியிடம் பிடித்துத் தருவதிலே டில்லி மக்கள் அவையின் துணைத் தலைவர் மாண்புமிகு தம்பித்துரை அக்கரை எடுத்துக் கொண்டார். அதனால் குடியரசுத் தலைவர்—பிரதமர்

ஆகியவர்களின் குடும்பத்தாருக்கென ஒதுக்கப்பட்டிருந்த சிறப்பிடத்திலே எனக்கு இடம் கிடைத்தது. அந்த இடத்திலே பிரதமர் மனைவி சோனியா காந்தியும் நானும்தான் பிரமுகர்கள்! எங்களுக்குப் பின்னே காவலுக்கு அமர்த்தப் பட்டவர்கள் இருந்தனர். மற்ற விடுதலை வீரர்களும் சாதனை வீரர்களும் எங்கிருந்தார்களோ. நான் அறியேன். எனக்குச் சிறப்பிடம் கிடைத்தது, ''வி. ஐ. பி.'' என்ற காரணத்தால்தான்! டில்லியிலே கெடுபிடிகள் அதிகம். காரணம், பஞ்சாப் தீவிரவாதிகளைப் பற்றிய அச்சந்தான்! குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வி., பிரதமர் ராஜீவ் காந்தி, சபா நாயகர் பலராம் ஜாக்கர், மாநிலங்கள் அவையின் துணைத் தலைவர் திருமதி பிரதிபா தேவ்சிங் படேல் ஆகியோர் முறையே சொற்பொழிவாற்றினர். இவர்களில் ஒவ்வொருவரும் மகாகவி பாரதியாரின் பாடலை உவமை காட்டுவதிலே போட்டியிட்டனர் என்றே சொல்ல வேண்டும். இப்படி ஒரு புதிய உணர்வு புது டில்லியில் தோன்றியிருப்பது எனக்கும் பெருமகிழ்ச்சியைத் தந்தது.

அந்தக் கூட்டத்திலே, கட்சிகளின் தலைவர்களில் எவரும் பேசவில்லை. அவர்கள் வந்திருந்தனரா என்பதே ஐயப்பாடு. அதைப்பற்றி விசாரித்தறிய நான் விரும்பவில்லை. அதிலே நம்முடைய தமிழக சட்டசபை தாராளமாக நடந்து கொண்டது. இங்கே ஆகஸ்டு ஒன்பதிலே நடந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அத்தனை பேரும் பேச அனுமதிக்கப்பட்டனர் என்பதை முன்பே அறிந்தோமல்லவா! நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் முடிந்ததும் மக்களவைத் துணைத் தலைவர் மாண்புமிகு தம்பித்துரையின் அறைக்குச் சென்று அவருடன் சிறிது நேரம் அளவளாவி விட்டு ''தமிழ் நாடு இல்லம்'' திரும்பினேன்!

# தாயின் மணிக் கொடிக்குத் தலை தாழ்த்தி வணக்கம்

1947க்குப் பின் ஆண்டுதோறும் வரும் ஆகஸ்டுப் பதினைந்தைப் பொன்னாளாகக் கருதி வந்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்டுப் பதினைந்தைச் சந்திக்கும் போது அந்நாளில் என்னை வாழவைத்த இறைவனுக்கு யான் நன்றி செலுத்துவதுண்டு, அதற்குக் காரணம், அந்த நாளிலே பெற்ற சுதந்திரத்திற்காக தொடர்ந்து இருபதாண்டு காலம் யான் போர்க்களத்தில் இருந்தவன் என்பதுதான்.

நான் 1927ல் காங்கிரசில் சேர்ந்தேன். அந்த ஆண்டுக்குப் பின் நடந்த சைமன் கமிஷன் பகிஷ்காரம், உப்புச் சத்தியாக் கிரகம், சட்டமறுப்பு. தனிநபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டுக் கிளர்ச்சி ஆகிய போராட்டங்கள் அனைத்திலும் யான் பங்கு கொண்டு சிறை புகுந்திருக்கிறேன்.

காந்தியடிகள் தந்த நிர்மாணத் திட்டத்தை ஏற்று, தீண்டாமை விலக்கு-மதுவிலக்கு-கதர் அபிவிருத்தி—தொழி லாளர் நலன்--தாய்மொழி வளர்ச்சி-பொதுமொழி பரப்புதல் ஆகியவற்றிலும் இரண்டறக் கலந்து பாடுபட்டேன். குடும்ப வாழ்க்கையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சந்தித்த காலத்திலும்-அதன் விளைவாக, யானும் என் குடும்பமும்

பட்டினிக்கு ஆளான நாட்களிலும் தேசியப் பணியிலிருந்து யான் விலகியதில்லை. விலக நினைத்ததுகூட இல்லை.

மதுவிலக்குக் கொள்கைக்கு வெற்றி தேடச் சென்னையில் கள்ளுக் கடை மறியலை நடத்தியபோது சுயசாதியாரால் பழிக்கப்பட்டேன். அந்த நிலையிலும் தளறாமல்—தயங்காமல் மறியலில் பலவார காலம் நாள்தோறும் ஈடுபட்டேன்.

இந்தப் புனிதமான பின்னணி காரணமாகவும் நாடு சுதந்திரம் பெற்ற ஆகஸ்டுப் பதினைந்து எனது பிறந்த நாளை விடவும் எனக்கு சிறந்த நாளாகி விட்டது.

1987 ஆகஸ்டுப் பதினைந்து நாடு சுதந்திரம் பெற்று நாற்பதாண்டு நிறைவுற்ற நாளானதால், அந்த நாளில் பாரதத்தின் தலைநகரான டில்லியில் இருக்க நேர்ந்ததை நினைத்துப் பெருமித முற்றேன்.

1947 முதல் ஆண்டுதோறும் சென்னை நகரிலிருந்து கொண்டுதான் சுதந்திர நாள் விழாவில் பங்கு பெற்று வந்தேன்.

1967லிருந்து 1971 வரை புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற தேசியக் கொடியேற்று விழாவில் சட்டப்பேரவை உறுப்பினனாகக் கலந்து கொண்டேன்.

அதன்பின், 1972 முதல் 1977 வரை சட்டமன்ற மேலவை யின் துணைத் தலைவனாகவும், அதற்குப் பின்னர் 1978 முதல் 1986 வரை மேலவைத் தலைவனாகவும் கலந்து கொண்டு மகிழ்ந்தேன்.

1987ல், வேதாரணியத்தில் புனித மண் எடுத்த விடுதலைப் போராட்ட வீரன் என்ற முறையிலே மத்திய அரசால் டில்லிக்கு அழைக்கப்பட்டேன்.

அந்த அழைப்பை ஏற்றுச் சுதந்திர நாற்பதாண்டு விழாவை யொட்டிய பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள டில்லிக்குச் சென்றேனாதலால், அங்கு ஆகஸ்டுப் பதினைந்து அன்று காலை செங்கோட்டையில் நடந்த கொடியேற்று விழாவிலும் கலந்து கொண்டேன்.

செங்கோட்டையின் மேல் தளத்தில் மத்திய மந்திரிகளும், மாவட்டங்களிலிருந்து வந்திருந்த ஆளுநர்களும், துணை நிலை ஆளுநர்களுமே அனுமதிக்கப் பட்டனர்.

கோட்டையின் கிழக்குப் புறத்தில் விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்த பிரமுகர்கள் அமர வசதி செய்யப்பட்டிருந்தது. அங்கு முதல் வரிசையில் தரப்பட்ட இடத்தில் அமர்ந்து கொடியேற்று விழாவைக் கண்டேன். பிரதமரால் தேசியக் கொடி உயர்த்தப்பட்டபோது எல்லோருடனும் சேர்ந்து எழுந்து நின்று மரியாதை செலுத்தினேன்.

எந்த மூவர்ணக் கொடியைக் கையிலேந்தி விடுதலைப் போராட்டக் காலத்திலே தடைச் சட்டத்தை மீறி வீதியிலே ஊர்வலம் சென்றதற்காகப் போலீசாரிடம் அடிபட்டேனோ— அந்தக் கொடியை, எந்தக் கொடியைத் ''தாயின் மணிக் கொடி'' என்று என் செந்தமிழ்ப் புலவன் பாரதி வருணித்தானோ! அந்தக் கொடியை, எந்தக் கொடியை புனித ஜார்ஜ் கோட்டையில் மாறிமாறி வந்த ஆளுநர்களும், முதல்வர்களும் ஆண்டுதோறும் உயர்த்தி வைத்தபோது தலை தாழ்த்தி வணங்கி வந்தேனோ அந்தக் கொடியை செங்கோட்டையில் பிரதமர் ராஜிவ் காந்தி ஏற்றி வைப்பதைக் காண முதன் முதலாக வாய்ப்புப் பெற்றேனாதலால், அந்த நேரத்தில் எனது மெய் சிலிர்த்தது. நெஞ்சிலே மகிழ்ச்சி வெள்ளம் அலைமோதியது; கண்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பனித்தன.

பிரதமர் ராஜீவ் காந்தி சரியாக 70 நிமிஷ நேரம் உரையாற்றினார். புதிதாகத் தொடங்கியுள்ள வழக்கத்தை

யொட்டி தமது பேச்சிலே மகாகவி பாரதியாரின் பாடல் வரிகளை உவமை காட்டினார். அந்த நேரத்திலே என் வாய் எதையோ முணுமுணுத்தது. அது, ''பாரதியின் புகழ் வாழ்க!'' என்பதாகத்தானே இருந்திருக்கும்!

கடுமையான வெயிலில் சரியாக 2 மணி நேரம் திறந்த வெளித் திடலில் அமர்ந்திருந்தது அலுப்பைத் தந்தது. வெயிலின் கொடுமையால் மயக்கமுற்று விடுவேனோ என்று கூட அஞ்சினேன். இதுபோன்ற நேரங்களில்தான் எனக்கு வயதாகி விட்டதென்பதை நான் நினைக்க முடிகிறது, எப்படியோ, என் மனத்திலுள்ள நாட்டுப் பற்றானது வெயிலின் கொடுமையைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலை என் உடலுக்குத் தந்தது.

ஆகஸ்டுப் பதினைந்தாம் தேதியன்று மாலை நாடெங்கு மிருந்து மத்திய அரசால் அழைக்கப்பட்டு டில்லிக்கு வந்திருந்த தியாகிகளுக்கு குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கடராமன் தமது ராஷ்டிரபதி பவனில் தேனீர் விருந்தளித்தார்.

சுமார் 200 தியாகிகளைச் சந்திக்கப் போகிறோம் என்று நினைத்துத்தான் ராஷ்டிரபதி பவனுக்குள் நுழைந்தேன். மாறாக, சுமார் 2000 பேர்களைச் சந்தித்தபோது வியப்பும் களிப்பும் அடைந்தேன். தமிழ்நாட்டி லிருந்து மட்டும் 200 பேர்வரை வந்திருந்தனர் எனக் கேள்வியுற்று பூரிப்படைந்தேன். அவர்களெல்லாம் என்னைச் சூழ்ந்து கொண்டு வாழ்த்தினர்; என்னிடமும் வாழ்த்துப் பெற்றனர். எல்லோருமே 70 வயதிலிருந்து 90 வயதுவரை மதிப்பிடத்தக்க ''கிழவர்கள்!'' ஆம்; முடிந்துகொண்டிருக்கிற பரம்பரை! வெகு விரைவில் முடிந்து விடப்போகிற பரம்பரை! ஆனால், அவர்கள் படைத்து வைத்துள்ள விடுதலைப் போராட்ட வரலாறு மனித சமுதாயத்தில் நிலைத்து வாழும். அது அவர்களது செந்நீரால் எழுதப்பட்டதாகும்.

வடபுலத்தவரில் எனக்கு நன்கு அறிமுகமான ‘‘ஆகஸ்டு வீராங்கனை’’ திருமதி ஆஸப் அலி போன்ற தியாகிகளை நேரில் சந்தித்து உரையாடியதிலே மகிழ்ச்சியடைந்தேன். என்னைச் சந்தித்ததிலே அவர்களுக்கும் மகிழ்ச்சிதான்! பிரதமர் ராஜீவ் காந்தியும் அவரது சக அமைச்சர்களும் விருந்தில் கலந்து மகிழ்ந்தனர்.

குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கடராமன், விருந்தில் கலந்துகொண்ட மத்திய மந்திரிகளுக்கும், நாடறிந்த தியாகிகளுக்கும் என்னை அறிமுகப் படுத்துவதிலே தனி ஆர்வங்காட்டினார். ‘‘இவர் எனது சிறைவாசத் தோழர்’’ என்பதை மறக்காமல் ஒவ்வொருவரிடமும் சொல்லி மகிழ்ந்தார். எனக்கு பள்ளித் தோழரென்றோ கல்லூரித் தோழரென்றோ எவருங் கிடையாது. மூன்றாம் வகுப்போடு என் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்துவிட்டதல்லவா!

நான் தொழிலாளியாக இருந்த காலத்திலே பல தோழர் களைப் பெற்றிருந்தேன். அவர்களிலே சிலர் என்னுடைய நினைவிலிருக்கின்றனர். ஆயினும், அவர்கள் என்னை நெருங்குவதில்லை. நான் ரொம்பவும் உயர்ந்து விட்டேன் என்ற நினைப்பால் நெருங்கத் தயங்குகின்றனர்.

ஆனால், எனக்கு சிறைச்சாலைத் தோழர்கள் நிறைய உண்டு. அவர்களிலே பிற்காலத்தில் குடியரசுத் தலைவரான வர்கள் மூவர்! அவர்கள் திருவாளர்கள் வி. வி. கிரி, என். சஞ்சீவி ரெட்டி ஆர். வெங்கடராமன் ஆகியோராவர். இம் மூவரில் முதலில் சொன்ன இருவரோடும் அமராவதி (மகாராஷ்டிர)ச் சிறைச் சாலையில் ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் தோழமை கொண்டு பழகும் பேறு பெற்றேன். குடியரசின் தற்போதைய தலைவர் மேதகு ஆர். வி. அவர்களுடன் வேலூர் சிறையில் தோழமை கொண்டேன்.

அதனை அவர் நாங்கள் சந்திக்கும் பொது மேடைகளிலே எடுத்துச் சொல்லத் தவறுவதே இல்லை,

ராஷ்டிரபதி பவனில் திரண்டிருந்த இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தியாகிகளிலே மாநிலங்களிலிருந்து புனித மண் கொண்டு வந்தவர்களும் கலந்து இருந்தனர். அவர்களில் மிகச் சிலரே எனக்கு அறிமுகமானவர்கள்.

புனித மண் கொண்டு வந்தவர்களிலே சாதனை வீரர்கள் அனைவருமே வயதில் இளையவர்களாதலால், அவர்கள் அனைவருமே எனக்குப் புதியவர்களாக இருந்தனர், தமிழ் நாட்டு சாதனை வீரர்கள் மூவருங்கூட இதற்கு விலக்கல்லர்.

ஆகஸ்டு 16 அன்று காலை நான் எதற்காக டில்லி சென்றேனோ, அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். அது, யான் கொண்டு சென்ற புனித மண்ணை ஒப்படைப்பதாகும்.

வேதாரணியத்திலிருந்து சேகரித்த புனித மண்ணை யான் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைத்த பின்னர், தூத்துக் குடியிலிருந்து திரு. எஸ். என். சோமயாசுலு சேகரித்த மண்ணை தியாகி எம். விஜயலட்சுமியும், மணியாச்சியிலிருந்து, திரு எல். கிருஷ்ணசாமி பாரதி சேகரித்த மண்ணை திரு. என். அண்ணாவியும், திருப்பூரிலிருந்து திரு. பெரியண்ண முதலியார் சேகரித்த மண்ணை திரு. ஜி. இ. ஸ்ரீதரனும் சென்னை கடற்கரையிலிருந்து திரு. த. செங்கல்வராயன் சேகரித்த மண்ணை செல்வி பௌஸியா பேகமும் ஒப்படைத்தனர்.

டில்லியில் ஆகஸ்டு 13 முதல் 16 வரை நடந்த சுதந்திர நாற்பதாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் தமிழ் நாட்டு இரு விடுதலை வீரர்களுக்கும், மூன்று சாதனை வீரர்களுக்கும் உதவியாக இருக்க டாக்டர் முரஹரி அவர்கள்

முன் கூட்டியே தமிழ்நாடு அரசால் டில்லிக்கு அனுப்பப்பட்டிருந்தார். ராஜ்காட் காந்தி சமாதியருகே நிகழ்ந்த புனித மண்களைக் கலக்கும் நிகழ்ச்சியிலே அவரும் கலந்து உதவி புரிந்தார்.

இந்த நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கடராமன் பிரதான பங்கு வகித்தார். ஆம்; அவர் தான் மாநிலந்தோறுமிருந்து கொண்டு வரப்பட்ட புனித மட் கலசங்களைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சி ராஜ்காட்டிலுள்ள காந்தியடிகள் சமாதி யருகே நடைபெற்றது. அனைத்து மாநிலங்களின் புனித மண் களும் ஒரு மேடையில் குவிக்கப்பட்டு பின் கலக்கப்பட்டன. கலந்தவை மாநிலத்தோறுமிருந்து வந்த மண்கள் மட்டுமல்ல; விடுதலைப் போராட்ட வீரர்களின் தனித்தனி வரலாறுமாகும். இந்த நிகழ்ச்சியில் டில்லி துணை நிலை ஆளுநர் அவர்கள் பங்கு கொண்டார்.

விடுதலை வீரர்களான ராஜாஜி, வ. உ. சிதம்பரனார், வீர வாஞ்சிநாதன், திருப்பூர் குமரன், நாவலர் எஸ். சத்திய மூர்த்தி ஆகியோர் தங்கள் வாழ்நாளில் சாதனைகள் புரிந்த இடங்களின் புனித மண்கள் வடபுலத்து விடுதலை வீரர்களின் மண்களோடு கலக்கப் பெற்றன.

அப்படி கலக்கப் பெற்ற புனித மண் குவியலிலே சில பிடி மண்களைத் தனித்தனியே எடுத்து குழிகளில் போடப்பட்டு, அக்குழிகளில் நாற்பதாண்டு விழா நினைவுச் செடிகள் நடப் பட்டன. இந்த புனிதப் பணியை குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வி. செய்தார், இது நிகழ்ந்தபோது காலை 9 மணி இருக்கும்.

பின்னர், குடியரசுத் தலைவர் முன்னிலையில் டில்லி துணை நிலை ஆளுநர் அவர்கள் மாநிலங்களி லிருந்து

வந்திருந்த விடுதலை வீரர்களிலே மாநிலத்திற்கொருவரை மட்டும் அழைத்து கலக்கப்பட்ட புனித மண்ணிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து புனித குடத்திலிட்டுக் கொடுத்தார்.

தமிழ் நாட்டிலிருந்து விடுதலை வீரர்களாக இருவரும் சாதனை வீரர்கள் மூவருமாக ஐவர் சென்றோமென்றாலும், கலக்கப்பட்ட புனித மண் அடங்கிய ஒரே குடம் என்னிடத்தில் மட்டுமே தரப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்டு அன்று மாலையே 'ஏர் இந்தியா' விமானத்தில் டில்லியிலிருந்து புறம்பட்டு இரவு 9 மணிக்கு சென்னை மீனம்பாக்கத்தை அடைந்தேன்.

# குடியரசுத் தலைவரை இருமுறை சந்தித்தேன்!

ராஜ்காட் காந்தி சமாதிமுன் நடைபெற்ற புனித மண் கலப்பு நிகழ்ச்சி, தேசபக்தியுடைய இந்தியர்களுக்கு—அவர்களிலும், விடுதலை வேள்வியில் தங்கள் இரத்தத்தை நெய்யாகச் சொரிந்த தியாகிகளுக்கு மன நெகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது. இப்படி ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த மத்திய அரசையும் சுதந்திர நாற்பதாண்டு விழா மத்திய குழுவையும் எவ்வளவு பாராட்டினாலும் தரும்.

மாநிலந்தோறு மிருந்த வந்த புனித மண்களை ஓரிடத்தில் குவித்து, அவற்றை கிண்டிக் கிளறிக் கலக்கிய காட்சியைக் கண்டபோது எனது மெய் சிலிர்த்தது.

சாதி இன சமய வேறுபாடுகளை மறந்து விடுதலை வேள்வியிலே இரத்தஞ் சொறிந்தனர் தேச பக்த வீரர்கள். அந்த வேள்வியின் நாயகனாக விளங்கிய காந்தியடிகளின் சமாதிக் கட்டத்திற்கருகே இந்த மண்கலப்பு நிகழ்ச்சி நடந்தது. இதற்கு அதைவிடப் பொருத்தமான வேறொரு இடத்தை ராஜீவ் காந்தி அரசு தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மேதகு ஆர். வெங்கடராமன் அவர்கள் தாம் வகிக்கும் பதவி காரண

மாக அழைக்கப்பட்டிருக்கலாம். ஆயினும், அவரும் விடுதலை வேள்விக்கு இரத்த தானம் செய்த தியாகியுமாவாராதலால், புனிதமிக்க கண் கலப்பு நிகழ்ச்சியை நடத்திவைக்க பொருத்த மானவராகவே இருந்தார்.

பாரத தேசம் விடுதலை பெற்ற பின், அது தனக்கென ஒரு அரசமைப்பைத் தயாரித்துக் கொண்டது. அதன்படி, குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவரிலே ஒருவர்தான் சிறை சென்று தியாக முத்திரை பெறாதவர், அவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் ஆவார். மற்றுள்ள அறுவரும், களம்புகுந்து விழுப்புண்பட்ட வீரர்களாவார். ஆம்; அந்த தியாகப் பரம்பரை இன்னமும் முடிவுக்கு வந்து விடவில்லை. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அரசியல் வாதியல்ல; தத்துவஞானி! அந்தத் தகுதி காரணமாகவே அவர் அரியணையில் அமர்த்தப்பட்டார்.

மாநிலந்தோறுமிருந்து வந்த புனித மண்களைக் கலந்த போது அவற்கைக் கொண்டுவந்த முதியோரான விடுதலை வீரர்களும் இளையோரான சாதனை வீரர்களும் காந்தி சமாதியைச் சுற்றி நின்றனர்.

கலப்பு மண்ணைப் பெறுவதற்கென்றே ஒரு மூங்கில் தட்டு அவர்களில் ஒவ்வொருவரிடம் தரப்பட்டது. அதைக் கையிலேந்தி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் கலப்பு மண் பெற்ற காட்சி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர்களில் நானும் ஒருவனல்லவா! ஆம்; எனது பாரத நாடு முழுவதிலு மிருந்து எடுக்கப்பட்ட புனித மண்ணில் ஒரு பகுதியை தமிழ் மாநிலத்துக்காக யான் பெற்றேன். இளைஞர்களான சாதனை வீரர்களில் எவரிடமும் புனித மண் தரப்படவில்லை. விடுதலை வீரர்களிடம்தான் தரப்பட்டது. இது, அவர்களைப் பெருமைப் படுத்தியதாகும்.

சாதனை வீரர்களிலே மாநிலத்திற்கொருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் சுதந்திர ஜோதி தரப்பட்டது. தமிழகத்தின் சார்பில் புனித மண் எடுத்துக் கொண்டு டில்லிக்கு வந்த சாதனை வீரர் மூவரிலே திரு. ஜி. இ. ஸ்ரீதர் என்பவரிடம் அந்த ஜோதி தரப்பட்டது. இது, ஆக, 15ல் செங்கோட்டையில் நடந்த தேசியக் கொடியேற்று விழாவின் போது நிகழ்ந்தது.

1947க்குப் பின் தோன்றிய இளந் தலைமுறையினர் தங்கள் முந்தையோர் படைத்தளித்த சுதந்திர பாரதத்தை பல வகையிலும் வளர்த்து வருகின்றனர் என்ற உண்மையை உலகுக் குணர்த்தவே 'சாதனை வீரர்' என்னும் பெருமைமிகு பெயரிலே இளைஞர் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாதனைக்குரிய செயலாக விளையாட்டுப் போட்டி தேர்ந் தெடுக்கப்பட்டது. அதிலே தேசிய அளவிலும், சர்வதேசிய அளவிலும் நடந்த போட்டிகளிலே ஈடுபட்டு வெற்றி பெற்றவர்கள் சாதனை வீரர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தமிழக அரசு தேர்ந்தெடுத்த சாதனை வீரர் மூவரில் டில்லியில் பிரதமரிடம் சுதந்திர ஜோதியைப் பெற்ற ஜி. இ ஸ்ரீதர் என்ற இளைஞர், 1986ல் சியோல் நகரில் நடைபெற்ற 10 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் வாலிபால் விளையாட்டில் போட்டியிட்டு வெற்றி கண்டு, வெண்கலப் பதக்கம் பெற்றவர். மற்று, இந்திய அரசிடம் 'அர்ச்சுன்' விருதும் பெற்றவர்.

தமிழகத்தில் ஐந்து இடங்களில் சேகரிக்கப்பட்ட புனித மண்களை டில்லிக்குக் கொண்டு சென்ற ஐவரிலே இருவர் பெண்களாவர். இவர்களில் திருமதி விசயலட்சுமி சென்னை வாசி யென்றாலும் ஆந்திர பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர். தமிழில் சுமாராகத்தான் பேசுகிறார். தமிழில் எழுதப் படிக்கத் தெரியாது போலும்! டில்லியிலிருந்து திரும்புங்கால்

விமானம் ஐதராபாத்தில் இறங்கியது. அப்போது வேடிக்கை யாக, "ஐதராபாத் வந்து விட்டது, இறங்குங்களேன்'' என்று அம்மையாரிடம் கூறினேன். அவர் என் குறும்புத்தனத்தைப் புரிந்துகொண்டு, 'நான் தமிழ் நாட்டவள்; ஆந்திராவில் ஏன் இறங்கவேண்டும்?' என்று என்னைக் கேட்டார். ''வேடிக்கையாகச் சொன்னேன்; நாம் தியாகிகள்; நமக்குள் இனபேதம் ஏன்?'' என்று சொல்லிச் சமாதானப் படுத்தினேன்.

விடுதலைப் பேராட்ட காலத்தில் சென்னை நகருக்குப் பெருமை தேடும் வகையில் களம் புகுந்து சாதனை புரிந்தவர் களிலே ஆந்திரருமுண்டு. 1930ல் நடந்த உப்புச் சத்தியாக் கிரகத்தின்போது திரு. டி.பிரகாசம், திரு. கே.நாகேஸ்வரராவ் ஆகியோர் புரிந்த சாதனைகளை தமிழர் மறக்க முடியுமா!

சாதனை வீரர்களில் டில்லிக்கு அனுப்பப்பட்ட செல்வி பௌசியா பேகம் உருதுவை வீட்டு மொழியாகக் கொண்ட முஸ்லிம் பெண்ணாவார். சென்னை மருத்துவக் கல்லூரி மாணவி. இவர், 1984ல் போபாலில் நடைபெற்ற தேசியப் பள்ளி மாணவர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

தமிழ்நாடு அரசு. சுதந்திர நாற்பதாண்டு விழா என்பதை மறந்துவிடாமல்—மொழி வேற்றுமையையும் மதவேற்றுமையையும் மறந்து-சுதந்திர வீரர்களையும் சாதனை வீரர்களையும் தேர்ந்தெடுத்தது பாராட்டத் தக்க தாகும்.

கிரிக்கெட்டும் விளையாட்டுதான். அதிலே சாதனைபுரிந்த தமிழ்நாட்டவரில் ஒருவரைத் தமிழக அரசு தேர்ந்தெடுத் திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், திரு. ஸ்ரீகாந்தாவது

திரு. எல் சிவராம கிருஷ்ணனாவது டில்லிக்குச் சென்று சுதந்திர ஜோதியைப் பெற வாய்ப்புப் பெற்றிருப்பர். இவர்களிருவரும் சர்வதேச ரீதியிலான விளையாட்டரங்கு களில் சாதனைகள் நிகழ்த்தியவர்கள்தானே! ஒருகால், மத்திய அரசே சாதனையாளர்களைத் தேர்ந்தெடுப்பதற் குரிய விளையாட்டுகளிலே கிரிக்கெட்டைச் சேர்க்காமல் விட்டதோ என்னவோ!

1947க்கு முன் தேச விடுதலையை விரும்பிக் களம்புகுந்த வீரர்களிலேயே விடுதலைக்குப் பின்னும் சாதனை புரிந்தவர் களுமுண்டு. அவர்களிலே நானும் ஒருவன் என்று அடக்கத் தோடு சொல்லிக் கொள்ள எனக்கு உரிமை உண்டல்லவா!

சுதந்திர இந்தியாவிலே தீர்க்கப்படவேண்டிய பிரச்னை களில் ராஜ்யங்களை மொழிவாரி திருத்தியமைப்பதும், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றி, பிரதேச மொழி களுக்கு எங்கும் எதிலும் தலைமை யளிப்பதும் முதற் பணியாகும். அந்தப் பணிகளுக்கு தமிழ் நாட்டளவில் பொறுப்பேற்று நான் சாதனைகள் புரிந்திருப்பதை என்னை வெறுப்போரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது தானே!

அரசியல் களத்திலே யான் புரிந்த இந்தச் சாதனைகள் விளையாட்டுக் களத்திலே இளந் தலைமுறையினர் புரிந்த சாதனைகளுக்கு இளைத்தவை யல்லவே! விடுதலை வீரனாக வும், சாதனை வீரனாகவும் எண்ணித்தான் என்னை தமிழக அரசு டில்லிக்கு அனுப்பியதாகக் கருதுகிறேன். ஆம்; தமிழகத் தில் ஐந்து இடங்களில் புனித மண் எடுத்தவர்களிலே என்னை மட்டும் டில்லிக்கு அனுப்பி வைத்ததற்கு அதுதான் காரணம் போலும்!

நான் டில்லியிலிருந்த நான்கு நாட்களிலே இரண்டாம் நாளிலேயே என் மகள் திருமதி மாதவியோடும் மருமகன்

திரு. கே. டி. பாஸ்கரோடும் சொந்த முறையில் ராஜகாட் சென்று காந்தி சமாதி மீது மலர் வளையம் வைத்து, அதனை வலம் வந்து அடிகளாரின் ஆன்மாவுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

அடிகளார் வாழ்த்திருந்தபோதே ஒருமுறை—அதாவது, 1946 செப்டம்பரில் டில்லி சென்றிருந்தேன். அதுதான் எனது முதல்பயணம். அப்போது அடிகள் பிர்லா மாளிகைத் திடலில் நடத்திய பிரார்த்தனையில் கலந்துகொண்டு மகிழ்ந்தேன். அதுதான் கடைசி தரிசனம்!

அடிகள் அமரரான பின்னர் நான் டில்லி செல்லும் போதெல்லரம் முதல் காரியமாகக் கருதி ராஜ்காட் சென்று அவரது சமாதிக்கு அஞ்சலி செலுத்துவது வழக்கம். டில்லியை இரவில் நேரங்கழித்து அடைய நேர்ந்தால் மறுநாள் காலை சென்று அஞ்சலி செய்வதுண்டு.

புனித மண் கலசத்துடன் டில்லி சென்றபோது இரவு 10மணியாகிவிட்டதால், மறுநாள் காலையில் காந்தி சமாதிக்குச் சென்றேன். அடிகளாரின் அடிச்சுவட்டில் நடை போடத் தொடங்கிய பின்னர்தான் நான் புதுவாழ்வு பெற்றேன். இல்லையேல், நான் யார்? எனக்கென ஒரு வரலாறு ஏது? அந்த நன்றிக்கடனுக்காகவும் ராஜ்காட் சமாதி வழிபாட்டைக் கடைப்பிடித்து வருகிறேன்.

ஆகஸ்டு 13ல் நாடாளு மன்றத்தின் இரு அவைகளுக்கும் சென்று நடவடிக்கைகளைக் கவனித்தேன். மக்களவையை துணை சபாநாயகர் மாண்புமிகு தம்பித்துரை மிகவும் திறமை யோடு நடத்துவதைப் பார்த்துப் பூரித்துப் போனேன். அவரும் தமிழர்; நானும் தமிழன்!

மாநிலங்கள் அவையைப் பார்ப்பதற்கு அதன் உறுப் பினர் திரு. நாராயணசாமி அழைத்துச் சென்று, பிரமுகர்கள்

அமருமிடத்தில் அமர்த்தினார். அப்போது, மாநிலங்கள் அவையின் தலைவர் பதவி காலியாக இருந்தது. அந்தப் பதவியிலிருந்த திரு. ஆர். வெங்கடராமன் குடியரசுத் தலைவராகி விட்டாரல்லவா!

துணைத் தலைவர் மாண்புமிகு பிரதிபா தேவ்சிங் தலைமை வகித்து அவையை நடத்திக் கொண்டிருந்தார். 'பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்' என்று மகாகவி பாரதி சொன்னது பொய்த்துப் போகவில்லை. அவரது கனவு இந்திய அரசியலில் துறைதோறும் நனவாகி வருகிறது.

மாநிலங்கள் அவைக்கு என்னை அழைத்துச் சென்ற திரு. நாராயணசாமி பாண்டிச்சேரியின் ஒரே பிரதிநிதியாக காங்கிரஸ் சார்பில் அந்த அவையில் அங்கம் வகிக்கிறார். கிராமணி சமூகத்தைச் சார்ந்தவர். அதே சமூகத்தைச் சார்ந்த திரு. டி. வி. ஆனந்தன் முன்னர் மாநிலங்கள் அவையில் காங்கிரஸ்சார்பில் தொடர்ந்து இருமுறை அங்கம் வகித்தார். அவர் தமிழ்நாடு சட்டப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டுச் சென்றிருந்தார்.

திரு. நாராயணசாமி எம். பி. அவர்கள், என்னை பிரதமர் இல்லத்திற்கே அழைத்துச் சென்று, அவருக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்பினார். இரண்டு நாள் கழித்து சுதந்திர நாளன்று ராஷ்டிரபதி பவனில் பிரதமரை சந்திக்க வாய்ப்பிருந்ததால், அதற்கு முன்னதாக ஒரு முறை அவருக்குத் தொந்தரவுதர நான் விரும்பவில்லை. அதனால், திரு. நாராயணசாமியின் விருப்பத்தைத் தவிர்த்தேன். அவருக்கு ஏமாற்றந்தான்!

ஆகஸ்டு 14 ஆம் தேதியன்று காலை முன்கூட்டி அனுமதி பெற்று, குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கடராமன்

அவர்களை ராஷ்டிரபதி பவனில் சந்தித்தேன். அவருடைய செயலாளர் திரு. கோபாலகிருஷ்ண காந்தி, இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தந்தார்.

திரு. கோ. காந்தி, காந்தியடிகளின் இளைய மகன் திரு. தேவதாசுக்கும், ராஜாஜியின் மகள் திருமதி லட்சுமிக்கும் பிறந்தவர். ஆனால், குடும்பப் பெருமையை அடியோடு மறந்து, தமது படிப்புக்கேற்ப ஐ. ஏ. எஸ். அதிகாரியாக இருந்து அடக்கமாக சேவை செய்து வருகிறார். அவரைப் பார்க்கும்போ தெல்லாம் அவரது அடக்கத்தைக் கண்டு நான் வியப்பதுண்டு.

அவர், தமிழில் பிழையின்றி நன்றாகப் பேசுகிறார். முன்னர் சென்னையில் ஆளுநர் மேதகு எஸ். எல். குரானாவிடம் செயலாளராக இருந்தபோது நாங்கள் அடிக்கடி சந்திக்க முடிந்தது. ஒருமுறை அவரைப் பார்த்து, 'தமிழில் பிழையின்றி நன்றாகப் பேசுகிறீர்களே!' என்று நான் சொன்னேன். அதற்கவர். வழக்கமான அடக்கத்துடன், ''தமிழ் என் தாய்மொழி ஐயா!'' என்று சொன்னார்.

திரு. ஆர். வி. குடியரசின் துணைத்தலைவரானபோதே, திரு. கோபாலகிருஷ்ண காந்தியை தன் செயலாளராக ஏற்று, அவரை டில்லிக்கு அழைத்துக் கொண்டு விட்டார். குடியரசுத் தலைவரான பின்னரும் திரு. காந்தியை ஆர். வி. விடவில்லை. தமிழில் அவருக்குள்ள ஞானத்திற்காகவுந்தான் ஆர்.வி. அவரை டில்லிக்கு அழைத்துக் கொண்டார் போலும்.

ராஷ்டிரபதி பவனில் நான் குடியரசுத் தலைவரைக் கண்டபோது, நாங்கள் அன்பால் அரவணைத்துக் கொண்டோம். அப்போது எனது எளிய நிலையை அவர் மறந்தார். அவரது உயரிய நிலையை நானும் மறந்தேன்.

உண்மை நண்பர்களாக உடம்பாரத் தழுவி மகிழ்ந்தோம். சுமார் முக்கால் மணி நேரம் பேசி மகிழ்ந்தோம். முன்னர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், திரு. வி.வி.கிரி, திரு. என். சஞ்சீவி ரெட்டி ஆகியோரையும் டில்லி ராஷ்டிரபதி பவனில் சந்தித்திருக்கிறேன். ஆயினும், அப்போதேற்பட்ட மகிழ்ச்சியை விடவும் அதிக மகிழ்ச்சியை மேதகு ஆர். வி. யைச் சந்தித்தபோது அடைந்தேன்.

நான் புதுடில்லியை விட்டுப் புறப்பட இருந்த நாளிலே முற்பகல் நேரத்தில் ராஷ்டிரபதி பவனிலிருந்து தொலை பேசி மூலம் ஒரு செய்தி கிடைத்தது. அது, டில்லியிலிருந்து விமான நிலையம் செல்வதற்கு அரைமணி நேரத்திற்கு முன் ராஷ்டிரபதி பவனுக்கு வருமாறு திரு. கோபாலகிருஷ்ண பாரதி தந்த தகவலாகும்.

நான் ஆகஸ்டு 14ல் ராஷ்டிரபதியைச் சந்தித்தபோது அவரது மனைவி திருமதி. ஜானகியம்மையாரைச் சந்திக்க முடியாமற்போய் விட்டது. அதனால், அம்மையார் தனது உபசாரத்தை ஏற்க என்னை அழைத்திருந்தார். ஆகவே, இரண்டாவது முறையாக ராஷ்டிரபதி பவனுக்கு என் மகளோடும் மருமகனோடும் சென்று ராஷ்டிரபதி தம்பதிகளுடன் அளவளாவி மகிழ்ந்தேன்.

ராஜாஜி டில்லியில் கவர்னர் ஜெனரல் பதவி வகித்த போது, முதன்முதலாக அவரை சென்னை ராஜ்பவனில் சந்திக்க நேர்ந்தபோது, ''டில்லிக்கு வந்து இந்த 'ஏழை'யின் கிரகத்தில் ஒரு நாளைக்கேனும் விருந்தாளியாகத் தங்கலாமே!'' என்று அழைப்பு விடுத்தார்.

டில்லி ராஷ்டிரபதி பவன் ஏழையின் இல்லமாம்! ராஜாஜிக்கு சென்னையிலுள்ள அவரது எளிய இல்லமும் புது

டில்லியிலுள்ள ஆடம்பரமான ராஷ்டிரபதி பவனும் ஒன்று போலத்தான்! அதனாற்றான், 'ஏழையின் இல்லம்' என்றார் போலும்! ஆனால், ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவி வகித்தபோது டில்லி செல்ல எனக்கு வாய்ப்புக் கிடைக்க வில்லை. அந்தக்குறை ராஷ்டிரபதி பவனில் ''ஆர். வி.'' யைச் சந்தித்ததனால் நீங்கிய தெனலாம்,

நானாக விரும்பி அனுமதி கேட்டுச் சந்தித்த இரண்டு நாட்களுக்குள் அவராகத் திடீரென அழைப்பு விடுத்தது எங்களுக்குள் நிலவும் உண்மையான நட்புக்குச் சான்றாகு மல்லவா!

புதுடில்லியில் தமிழ் நாடு இல்லத்தில் இருந்தபோது, அதன் அதிகாரிகளும் அலுவலர்களும் என்னை மிகுந்த அன்போடு உபசரித்தனர். இது இயற்கைதா னென்றாலும், எனக்குத் தேவைப்படும் பத்திய உணவைச் சமைத்துத் தருவதிலே அவர்கள் காட்டிய அக்கரை என்னைக் கவர்ந்தது.

ஆகஸ்டு 16 ஆம் தேதியன்று மாலை 3-30 மணிக்கு ''தமிழ் நாடு இல்லத்'' திலிருந்து புறப்பட்டு, வழியில் குடியரசுத் தலைவரைச் சந்தித்துவிட்டு, டில்லி விமான நிலையத்தை அடைந்தேன்.

புனித கலப்பு மண் குவியல் கொண்ட கலசத்தைக் கையிலேந்திக் கொண்டு ''இந்தியன் ஏர் லைன்ஸ்'' விமானத் தில் பயணஞ் செய்து, அன்றிரவு 9 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் வந்து சேர்ந்தேன்.

என் இரு கைகளாலும் கலப்பு மண் கலசத்தை ஏந்திய வண்ணம் விமானத்திலிருந்து இறங்கினேன். டில்லி சென்ற

போதும் அங்கிருந்து சென்னை திரும்பியபோதும் என் கையிலிருந்த ஐம்பொற் கலசம் ஒரே அளவானதுதான். அதிலிருந்த மண்ணின் அளவிலும் வேற்றுமையில்லைதான். ஆனால், கொண்டு போன கலசத்தைவிட கொண்டு வந்த கலசம் கொஞ்சம் பளு கூடுதலாகத் தெரிந்தது. டில்லிக்குக் கொண்டு போனது தமிழ்நாட்டின் புனிதமண் மட்டுந்தான். டில்லியிலிருந்து கொண்டு வந்தது, பாரதப் பெருநாடு முழுவதிலும் திரட்டப்பட்ட புனித மண் கலந்த கலசமல்லவா! இது, எனது கற்பனையல்ல; எனக்குள்ள நாட்டுப்பற்று காரணமாக யான் பெற்ற கருத்தோட்டம்!

# சென்னை ராஜ்பவனில் நினைவுச் செடிகள்!

புனித கலப்பு மண் கொண்டு புதுடில்லியி லிருந்து சென்னை வந்ததும், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என்னை வரவேற்ற செய்தித் துறை அதிகாரிகளிடம் மண் கலசத்தைக் கொடுத்தேன். அத்துடன் புனித மண் சம்பந்தப் கட்ட என் கடமைகள் முடிந்தன.

ஆகஸ்டு 7 ஆம் தேதியன்று வேதாரணியத்தில் புனித மண் எடுத்ததிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் சுதந்திர நாற்பதாண்டு விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டேன். அந்த நிகழ்ச்சிகள் வேதாரணியத்தி லிருந்து டில்லியிலுள்ள ராஜ்காட்வரை அமைந்திருந்தன என்பதை மீண்டுமொரு முறை நினைவில் கொள்வோமாக!

நான் புதுடில்லியிலிருந்து கொண்டு வந்த புனித கலப்பு மண் அக்டோபர் 2 ஆம் நாளிலே காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் கிண்டி ராஜ்பவனத்திலே நினைவுச் செடி கள் நடுவதற்குப் பயன்படுத்தப் பெற்றது. அதற்காகத்தான் அந்த மண் என்னிடம் கொடுத்தனுப்பப்பெற்றது.

தமிழக ஆளுநர் மேதகு எஸ். எல். குரானா அவர்கள் அக்டோபர் 2 அன்று மாலை ராஜ்பவனத்தையடுத்துள்ள

திறந்த வெளியில் தமது கரத்தால் என்னிடமிருந்து புனித மண்ணைப் பெற்று, அதில் ஒரு பகுதியை ஒரு குழியிலிட்டு, அதிலே செடியொன்றை நட்டார்.

எஞ்சியிருந்த மண்ணைக் கொண்டு செய்தி அறத்துறை யமைச்சர் மாண்புமிகு வி. வி. சுவாமிநாதன், தொழிலமைச்சர் மாண்புமிகு க. ராசாராம், கிண்டி காந்தி மண்டபக் குழு உறுப்பினரும் மத்திய அரசின் முன்னாள் துணையமைச்சரு மான திரு. சி. ஆர். பட்டாபிராமன், தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் திருமதி யசோதா ஆகியோரும், நானும் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் புனித கலப்பு மண்ணைப் போட்டு செடிகள் நட்டோம். டில்லி யிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த கலப்பு மண்களும் ஆங்காங்குள்ள ராஜ்பவனங்களில் காந்தியடிகள் பிறந்த நாளிலே செடிகள் நடுவதற்குப் பயன்படுத்தப் பெற்றன.

புதுடில்லியிலே சாதனை வீரர் திரு. ஜி. வி. ஸ்ரீதர் ராஜீவ் காந்தியிடம் பெற்றுவந்த சுதந்திர ஜோதியானது, 17-8-87 அன்று மாலை சென்னை காமராசர் கடற்கரைச் சாலையி லுள்ள தீவுத்திடலில்செய்தி-அறத்துறையமைச்சர் மாண்புமிகு வி. வி. சாமிநாதன் அவர்களால் ஏற்றிவைக்கப் பெற்றது. அந்த நிகழ்ச்சியிலும் அழைப்பின் மீது யான் கலந்து கொண் டேன். அந்த நிகழ்ச்சியின்போது செய்தித்துறை அமைச்சரும், உலக விளையாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களும் தந்த இரு கேடயங்களைப் பெற்று மகிழ்ந்தேன்.

எனது அறுபதாண்டு கால அரசியல் வாழ்க்கையிலே நாட்டு விடுதலைப் போரில் தொடர்ந்து இருபதாண்டு காலம் ஈடுபட்டு ஆறுமுறை சிறை செல்லும் புனித வாய்ப்பினைப் பெற்றேன். எஞ்சிய நாற்பதாண்டு காலத்திலே, 1947ல் நாடு சுதந்தரம் பெற்றதைக் கண்டு களித்தேன்.

1950 ஜனவரி 26 ல் இந்தியா தனக்கென தானே தயாரித்துக் கொண்ட அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, அது சம்பந்தமான விழாவிலும் கலந்து கொண்டு மகிழ்ந்தேன், அந்தநாளில் நான் சென்னை மாநகராட்சியிலே ஆல்டர்மேனாகப் பதவி வகித்ததால், அங்கு புனித அரசியல் அமைப்பின் மீது விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தேன்.

1972 ஆகஸ்டு 15 ல் நடைபெற்ற இந்திய சுதந்திர வெள்ளி விழாவிலேயும் கலந்து கொண்டு மகிழ்ந்தேன். அப்போது தமிழக சட்டப் பேரவையிலே நான் அங்கம் வகித்த தால். நள்ளிரவில் நடந்த அந்த அவையின் சிறப்புக் கூட்டத் திலே கலந்துகொண்டு சுதந்திரப் போரில் கலந்து உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திப் பேசும் பெருவாய்ப்பினை யும் பெற்றேன்.

சுதந்திர இந்தியாவிலே சுயாட்சி மாநிலம் அமைக்கவும் உறுதி மேற்கொண்டேன். அதனை காங்கிரஸ் மூலமே சாதிக்க முடியுமென்று நம்பினேன். அது சாத்தியமில்லை யென்று அறிந்தபோது, தமிழரசுக் கழகத்தைத் தொடங்கி, அதன் மூலம் தொடர்ந்து பாடுபட்டேன். அவசியப்பட்ட போது, போராட்டங்களையும் நடத்தினேன். அவற்றிலே ஈடுபட்டு, யான் விரும்பாத நிலையிலே இருமுறை சிறைபுக வும் நேரிட்டது.

1956 நவம்பர் 1-ல் தமிழகம் தனியரசு மாநிலமானதை யும் கண்டேன். அதே நாளில் கல்குளம்—விளவங்கோடு—அகத்தீசுவரம்-தோவாளை-செங்கோட்டை ஆகிய ஐந்து தாலுக்காக்கள் கேரளத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தமிழகத்தோடு இணைக்கப்படுவதையும் கண்டு என் கண்கள் களிப்புற்றன.

1960 ஏப்ரல் 1 ல் திருத்தணிகை வட்டமும் வேறு சில கிராமங்களும் ஆந்திரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு

தமிழகத்தோடு இணைக்கப்படுவதைக் கண்டு மனம் பூரித்த தோடு, அந்த நாளிலே தணிகையில் ராஜோபசாரமாக வரவேற்கப்படும் பேற்றினையும் பெற்றேன்.

சரியாக 82 ஆவது வயது நடக்கும் முதுமைப் பருவத் திலே சுதந்திர இந்தியாவின் நாற்பதாண்டு விழாவையும் காணவும், வேதாரணியத்திலிருந்து புதுடில்லிவரை யாத் திரை செய்து அந்த விழா நிகழ்ச்சிகளிலே பங்கு பெறவும் வாய்ப்புப் பெற்றேன். இது பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி ஆர், அவர்களின் ஆட்சி எனக்குச் சேர்த்த பெருமை யாகும்!

இன்னும், தமிழர் வாழ்விலே தமிழ்மொழி யொன்றே தலைமை தாங்கும் நன்னாளையும் கண்டு மகிழ விரும்பு கிறேன். அதையும் செய்து முடிக்கத்தான் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுவின் தலைமைப் பொறுப்பில் என்னை வைத்திருக்கிறார். தமிழர் வாழ்வில் எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற நிலை ஏற்படுவதையும் கண்டுகளிக்க இறையருள் கைகொடுக்குமாக! வாழ்க, சுதந்திர இந்தியா!